513

மு.கருணாநிதி

முரசு 1 | சென்னை 4-3-55 வெள்ளி | ஒலி 49

## இரண்டாவது 5-ஆண்டுத் திட்டம்
## எப்படிப் பிறக்கப் போகிறதோ ?




## ஆடிக் காற்று — மு. க.

(7-ம் பக்கம்)

# புற்றுப் பாம்பு புது விஷம் கக்குகிறது!

★ **புற்றுப் பாப்பு புது விஷம் கக்குகிறது!**

★ **நீண்ட நாள் அமைதியால் சொல்லெல்லாம் நெருப்பாகி விட்டன!**

★ **இலட்சியக் கொழுந்துகளை, எதிர்கால நிர்மாணகர்களைமறைமுகமாக் சாடியிருக்கிறார் ஆச்சாரியார்.**

"முன்காலத்து மாணவர்களை விட இக்கால மாணவர்கள் மிகவும் அழகாக உடை அணிந்திருக்கின்றனர். இன்றைய மாணவர்களின் வெளித்தோற்றம் மாத்திரமன்றி மனோபாவமும் மாறியிருக்கிறது" ஆச்சாரியாரின் இந்த வாசகங்களைப் படித்து முடித்ததும், வேத உபநிஷத்களையும், வேள்வியின் மகத்துவங்களையுமே காலமெல்லாம் போதித்து வரும் வேதாந்தி ஆச்சாரியாரா புதுமை தாகம் பெற்றுப் பேசியிருக்கிறார் என்று ஆச்சரியப் பட்டுவிடாதீர்கள். ஆரியகுல மகிபரின் அடுத்த வாசகங்களையும் படியுங்கள்:

"பழையகாலத்தில் மாணவர்களுக்கு ஒரு பாவமும் தெரியாது, அது எங்கள் (பார்ப்பனர்) கிட்டவே வராது. பிறவியிலேயே நாங்கள் உயர்ந்தவர்கள் என்று அர்த்தமல்ல இதற்கு"—சென்னை கலைக் கல்லூரியில் பேசியிருக்கிறார்.

இந்தக் காலத்து மாணவர்கள் வெளித் தோற்றத்திலும் மனோபாவத்திலும் மாறியிருக்கிறார்களாம். அதன் காரணமாகத்தான் இந்தக் காலத்து மாணவர்கள் பார்ப்பனீயத்தைச் சாடுகிறார்களாம். அந்தக் கால மாணவர்கள் ஒரு பாவமும் அறியாதவர்கள், அது எங்களை அணுகவே மாட்டாது என்றால் இந்தக் கால மாணவர்கள் ஆரிய வட்டாரத்தைச் சாடுகிறார்கள் என்றுதானே பொருள்! 'ஆரியர்கள்' என்று நாங்களாக யூகித்துச் சேர்த்துக்கொண்டதாக எண்ணி விடக்கூடாது. ஆச்சாரியாரே அடுத்த வாக்கியத்தில் 'எங்களை' என்ற சொல்லுக்கு 'பிறவியிலேயே உயர்ந்தவர்கள் என்று அர்த்தமல்ல இதற்கு' என்று சொல்லியிருக்கிறார். ஆச்சாரியாரின் வாசகங்களை மீண்டும் ஒருமுறை படித்துப் பார்த்தால், மாணவர்களை அந்த மாமுனிவர் எப்படிக் கருதிக் கொண்டிருக்கிறார் என்று புலனாகும். உலகில் தோன்றி வாழ்ந்துவரும் 84 லட்சம் ஜீவராசிகளுள் நன்மை — தீமைகளை, உணர்வதற்கான பகுத்தறிவும், பிறரறியும்படி பேசும் திறனும் படைக்கப் பெற்றவர்கள் மனித சமுதாயத்தினர் மட்டும்தான். அந்த மதிப்பை மாணவர்களுக்கு ஆச்சாரியார் தரவில்லை, மாணவர்களை 'அது' என்று சொல்லியிருக்கிறார். அது, அவை, என, நாம் எதைக் குறிப்பிடுகிறோம் என்பதை நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள்! காலதேவனின் தேரோட்டத்தினால்தான் நாட்டவரின் கருத்து மாறுபட்டுவிட்டது என்பதை ஆச்சாரியார் உணர்ந்துகொண்டார். அதன் பயனாய் வாழைப் பழத்தில் ஊசியேற்றும் ஆரியத்தின் வஞ்சக வேலைகள் வெற்றிபெற முடியவில்லை என்பதையும் அவர் தெரிந்துகொண்டார். மாணவர்களின் எதிர்ப்பினால்தான் தனது முகாமிற்கு எதிர்ப்பு அதிகமாகிறது என்பதையும்; மாணவர்களின் வாதப்பிரதிவாதங்களால்தான் மத நம்பிக்கை அழிந்தொழிந்து வருகிறது என்பதையும் அறிந்த ஆச்சாரியார் அந்த மாணவர்களை அடக்க எத்தகைய 'சக்கரத்தை' சுழற்றுகிறார் பாருங்கள்.

"இந்தக் காலத்தில் மாணவர்கள் கனவான்களைப் போல நடத்தப்படுகிறார்கள். ஆனால் உண்மையிலே உள்ளபடி நீங்கள் நடத்தப்பட்டால் அது உபயோகமுள்ளதாக இருக்கும்" மாணவர்கள் எஜமானர்களைப்போல நடத்தப்படுகிறார்களாம்—மாம்பலத்தார் புகார் செய்கிறார். கௌரவம் கொடுப்பது தவறு என்றால் கல்வி கற்க வேண்டிய அவசியமே இல்லையே! பிறரை மதி, அன்பாக நேசி, உண்மையே பேசு, இவைதான் கற்றக் கல்வியின் ராஜ கட்டளை! இந்த நல்லுபதேசம் நஞ்சுக்கு ஒப்பானதென்றால் பல்கலைக் கழகங்கள் ஏன், பாராள ஓர் அரசாங்கம்தான் எதற்கு? "ஏகலைவனின் விரலைத் துண்டித்த இரக்கமற்ற 'துரோணாச்சாரியார்'கள் இந்த நூற்றாண்டுக்கும் தேவை; விரிந்த ஆலமரத்து நிழலில் அமர்ந்து, விஷமுண்ட தேவர்களை வேண்டி, பின் போதிக்கப்படும் ஆஸ்ரமக்கல்விதான் வேண்டும்; அப்போதுதான் நாம் செய்வதை எதிர்த்துக் கேட்கும் அறிவும் வளராது, நம்மவர் எத்திப் பிழைப்பதற்கும் ஏதுவாகும்" என ஆச்சாரியார் ஆசைப்படுகிறார். ஐயோ பாவம், அவருடைய ஆசைக்கு 'அற்ப ஆயுள்'தான் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்!

இந்தியத் துணைக்கண்ட அரசியலிலே அடிமுதல் நுனிவரை இருந்து, ஆங்காங்கே அவதிப் பட்டு இனிமேல் எங்கே ஆசனம் கிடைக்கும் என்று ஏங்கிக் கொண்டிருக்கும் ஆச்சாரியார், மாணவர்கள். அரசியலைப் பற்றியே தெரிந்து கொள்ளக்கூடாதென்றும் பேசியிருக்கிறார். "அரசியலில் பங்கேற்காதே" என்றால் அது அர்த்தமுண்டு. அரசியலையே தெரிந்து கொள்ளாதே என்பது சிந்தனா சக்தியைக் கொல்லுவதோடு மட்டுமல்லாமல், மாணவர்களை தலையாட்டிப் பொம்மைகளாக்கும் சதியாக இருக்குமோ என்று கூட அல்லவா எண்ணத் தூண்டுகிறது, பாபர் எப்போது வந்தான், அக்பர் எப்போது சிங்காதனம் ஏறினான் என்ற கேள்விகளையும் கேட்டு அதற்கு தகுதி, தேர்வுகளையும் தரும் சரித்திரத்தையும் பாடமாக வைத்துக் கொண்டு மாணவர்களை அரசியலில் பங்கேற்காதே என்றால், இது ஒப்புக் கொள்ளக் கூடிய வாதமாகுமா? இன்றைய அரசியல்தானே நாளைய சரித்திரம்! இது தெரியாதா ஆச்சாரியாருக்கு? தெரியும்; தெரியும்! ஆபத்துக்குத் தீட்டுப் பார்க்காத குலமல்லவா அவரின் குலம்!

காரியம் சாதிக்க, பாம்புக்கும் பாலூட்டுவார்கள், பச்சைக் குழந்தையையும் கதற விடுவார்கள்!

★

# அடை மழை! அணைக்கட்டு!

—:(★):—

காங்கிரஸ் ஆட்சியாளர்கள் தாங்கள் செய்துள்ள சாதனைகளின் எண்ணிக்கை பெருக வேண்டும் என்பதற்காகவே நன்மை, தீமை புரியாமல் சட்டங்களை பெற்றெடுத்து விடுகிறார்கள். அவைகளில் எத்தனையோ சட்டங்கள் மக்களின் உள்ளம் அறியாமல் கொண்டு வரப்பட்டு இறுதியில் சர்க்காரின் மூக்கு உடைபட்டிருக்கிறது, இதற்கு பல உதாரணங்களைக் காட்ட முடியும். இப்பேர்ப்பட்ட 'வெற்றிகர வாபஸ்' ஒன்று அண்மையில் நடைபெற்றிருக்கிறது. ஏன், சர்க்கார் சட்டத்தைக்கொணர வேண்டும், பிறகு அதை வாபஸ் பெற வேண்டும்? இதைப்பற்றி தூரிலிருந்து, துளிர் வரையிலுள்ள எந்தக் காங்கிரஸ் தலைவர்களும் யோசிப்பதே இல்லை.

மேல் நாடுகளில் இதுபோன்ற தவறுகள் ஏற்படாததற்குக் காரணமே, அவர்கள் திறமைக்கேற்ற பொறுப்பை அவரவர்களிடம் ஒப்படைக்கிறார்கள். இங்கு அப்படியில்லை! காங்கிரஸ் மந்திரி சபையிலே ஒரு இடம் காலியாக இருக்கிறதென்றால், அந்த இடத்தை நிரப்புவதற்காக செல்வாக்குள்ள ஒரு பெரும்புள்ளியைப் பிடித்துப் போட்டு விடுகிறார்கள். முறைப்படி ஒரு இலாகா அவரிடம் ஒப்படைக்கப்படும். அந்தத் துறையிலே அவருக்குத் தேர்ச்சியுண்டா என்று பார்ப்பதில்லை, கைகொடுத்தார் — காங்கிரசின் மானத்தைக் காப்பாற்றினார், அதற்காக நன்றி செலுத்தும் முறையிலே அந்தப் பதவி அவருக்குத் தரப்படுகிறது. தனக்கு கணிதம் வராது என்று வேறு, வேறு துறைக்குப் படித்தவர்களெல்லாம் நிதித்துறைக்குப் பொறுப்பாளராகி விடுகிறார்கள். சட்டம் படித்தவர் கையிலே நிதி, சட்டம் படித்தவர்கள் கையிலே அணைக்கட்டுகள் — இந்த நிலைதான் இன்றைய காங்கிரஸ் அரசாங்கத்தில்.

டில்லி அமைச்சரவையில் கனம் கேஸ்கர், பதவியேற்றதும் திரைப் படப் பாடல்களை ரேடியோவில் ஒலிபரப்புவதைக் கண்டித்தார்; படப்பாட்டுகள் போடுவது குறைந்தது. திரைப்பட இசையால் மக்களுக்கு அனுகூலமில்லை என்று போகுமிடமெல்லாம் பேசினார். இதனால் சர்க்காருக்கும் படத்தயாரிப்பாளருக்கும் இடையே வெறுப்பு வளர்ந்தது-உடன்பாடு முறிந்தது.

இதனால் இல்லத்து ரேடியோக்களிலெல்லாம் தூசிபடிந்தது. இசை பயில்வோருக்குக் கூட கர்நாடக சங்கீதத்தில் சலிப்பேற்பட்டு விட்டது. அதற்காக கர்நாடக சங்கீதத்தை அவர்கள் வெறுத்து விட்டார்கள் என்றல்ல பொருள். இடையிலே மாற்றம் விரும்புகிறார்கள் மக்கள்; அவ்வளவுதான்! இதை முதலிலே புரிந்து கொண்டிருந்தால் தோல்வி ஏன், 'திரைப்பட பாடல்களை ஒலிபரப்ப மீண்டும் சர்க்கார் இணங்கிற்று; மக்கள் உள்ளமறியாதவர்கள் படுதோல்வி யடைந்தார்கள்' என்ற கெட்ட பெயர் ஏன்? ஆமாம் இப்போது இணங்கியிருக்கிறார்கள்! திரைப் பாடல்களில் நல்ல கருத்து நிறைந்த பாடல்களும் இருக்கின்றன; அதே நேரத்தில் கர்நாடக சங்கீதத்தில் 'ஏன் பள்ளி கொண்டீர் ஐயா' என்ற வரட்டுத் தத்துவம் கூறும் பாடல்களும் உள்ளன, இதயத்தைத் தொடக் கூடியதும் இனிது பயக்கும் கருத்தைக் கொண்டதுமான இசைதான் இப்போது நாட்டுக்குத் தேவை என்பதை சர்க்கார் தெரிந்துகொள்ள வேண்டும். குறிப்பாக கேஸ்கர் தெரிந்து கொள்ளல் நலம்.

பண்டித நேருவோ சினிமா நடிகைகளுக்கு பேட்டி தருகிறார். அவர்களின் இசையை ரசிக்கிறார்-புகழ்கிறார். ஆனால் கேஸ்கரோ சினிமா பாட்டு வேண்டாம் என்கிறார், இது அடைமழையில் அணைக்கட்டு போடுவது போலல்லவா இருக்கிறது.

★

# தலையங்கம்

சென்னை 4—3—55 வெள்ளி

## கண்டனக் குரல்!

உலக நாடுகளின் வரலாற்றிலே வளமிக்க பகுதி, சொந்த நாட்டிலே வந்து புகுந்தோரை — எதிர்த்துக் களம் அமைத்துப் போராடிய பொன்னேடுகள்தான்! குலை தள்ளிய வாழை சாய்ந்துவிடுவதைப் போல, தேசிய எழுச்சிக்கு வித்தூன்றிய இயக்கங்கள் காலப்போக்கிலே அழிந்துவிட்டாலும் கூட, அவைகள் துவக்கிவைத்த விடுதலை விருத்தம் இருக்கிறதே, அந்த நாதத்தை இசைப்பதிலேயே பற்பல நாடுகள் புது வாழ்வு பெற்றிருக்கின்றன. மலையை எதிர்க்கிறோமே; முடியுமா என்று ஆரம்பத்தில் மூக்கிலே விரல்வைத்தோர், பின்னர் மலையினும் வளர்ந்த தங்கள் வலிமை கண்டு பூரித்து, அன்னிய முடிக்கு வேட்டு வைத்திருக்கின்றனர். தாயகத்தின் தளை உடைக்க எண்ணூறு ஆண்டுகளாக, தூக்கிய சம்மட்டியை தாழ்த்தாமல், வீரம் தேக்கிய தோளிலே நம்பிக்கை வைத்து போர் வீரர்களைத் தயாரித்துக்கொண்டிருந்த நாடு அயர்லாந்து என்று சொன்னால் அது மிகையாகாது. உரிமை முரசம் தட்டப்பட்ட அந்தப் போராட்ட காலத்திலேதான் "கலிவர் யாத்திரை" என்னும் புதுப் பாட்டு இயற்றிய **ஜோனாதன் ஸ்விப்டு** வாழ்ந்துவந்தான்.

"பிரிட்டிஷ் நிலக்கரி ஒன்றைத் தவிர்த்து, மற்றெல்லா பிரிட்டிஷ் பொருள்களையும் நெருப்பிலே போட்டுக் கொளுத்துங்கள்" — என்று, தீப்பொறி கக்க; தேய்ந்துபோன தோள்கள் தினவு எடுக்கும் அளவுக்கு அந்தக் கவிஞன் வீரவுரையாற்றிவந்தான். டப்ளின் மாநகரத்தில், இன்றும் காட்சிதரும் அந்தப் புரட்சிப் பாவலனின் சமாதியிலே செதுக்கப்பட்டிருக்கும் எழுத்துக்கள் இன்னும் எழுச்சி மிக்கவை! மரணத்தின் தோளிலே சாய்ந்தபடி, அவன் உச்சரித்த உணர்ச்சி கொப்பளிக்கும் வாசகம் இதோ:

"முப்பது ஆண்டுகள் தேவாலயத்தின் குருவாக இருந்த ஜோனாதன் ஸ்விப்டின் தேகம் இங்கேதான் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. எந்த இடத்தில் காட்டுமிராண்டிகளின் கோபம் அவனுடைய இருதயத்தை எரிக்காதோ, அந்த இடத்துக்கு அவன் போய்விட்டான்.

"ஓ, யாத்ரீகனே! சுதந்திரத்தைக் காப்பதில் ஓர் ஆண் மகனுக்குரிய கடமையை நிறைவேற்றிய ஒருவனுடைய அடிச்சுவட்டை, முடியுமானால் நீயும் பின்பற்றுவாயாக!"

செங்கதிரோன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தவரின் போக்கை, 'காட்டுமிராண்டிகளின் கோபம்' என்று பகிரங்கமாகக் குற்றம்சாட்டி; செத்த பின்பும் சுதந்தரச் சுருதி கூட்டி, எழுச்சிகீதம் இசைக்கும் எந்தல், உலகத்தவரின் நினைவிற்குரியவன்! இடுகாட்டிலே; ஒப்பாரி சப்தத்துக்கு இடமளிக்காமல், 'என் சமாதியைப் பார்ப்போரே—இந்த சில்லிட்ட பிணத்திற்கு இருக்கும் விடுதலை உணர்ச்சியிலே—தாயகத்தின் மழலை, தன் தாய்க்குச் செய்யவேண்டிய கடமை உணர்விலே, ஆயிரத்தில் ஒரு பங்குகூட ஆண்மையோடு உலவும் உங்களுக்கு இல்லையா?'—என்று, உயிரோடு உலவுபவர்களுக்கு — உலராத மனச்சாட்சி கொண்டோருக்கு, அவன்விட்ட 'சவால்' இருக்கிறதே, அது நம் போன்ற நாட்டுவிடுதலைப் படையினர் உள்ளுதற்குரியது!

அயர்லாந்தின் புரட்சிப் புதல்வனைப்போல மூச்சு நின்ற பின்பும், தாயக விடுதலை ஒன்றையே இறந்தகாலப் பேச்சாகக் கொண்டு நாளெல்லாம் பாடுபட்டு, நாடுகாக்கும் நல்லதம்பிகள் நிறைந்த அரசியல் இயக்கம்தான், திராவிட முன்னேற்றக் கழகம். கழகத்தின் இரண்டாவது பொதுக்குழு கோவையை அடுத்த பேரூரிலே கூடி, நிறைவேற்றிய தீர்மானங்கள் யாவும் துணிவுமிக்கவை; தேவையானவை; நாட்டினரின் வரவேற்புக்குப் பாத்திரமானவை!

வாழும் வடக்கு-தாழும் தெற்கு—என்று, விந்தியத்தின் அப்பால் உள்ளோரின் வளர்ச்சி பற்றியும், இப்பால் உள்ளோரின் வறண்ட நிலைபற்றியும் நாம் பலமுறை புள்ளி விபரங்களுடன் எடுத்துச்சொல்லியிருக்கிறோம். நாம் மட்டுமல்ல; அரசியல் அமைப்பு விதிகளைக் கற்றுணர்ந்த மேதையாம் இலங்கைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், ஐவர்ஜென்னிங்ஸ், இந்திய அரசியல் சட்டம் வடதிசை வாழ்வோரும், பார்ப்பன மாந்தரும் பயனுற வாழ்வதற்கென, அமைத்துக் கொண்ட சாதனம் என்று—கண்டித்துப் பேசியது நாட்டினருக்கு நன்றாக நினைவிருக்கும். ஜி. டி. நாயுடு அவர்களின் 'இயந்திர உடைப்பி'லே பங்கு கொண்டு, தொழில் வளத்திலே டில்லி சர்க்காரால் தெற்கு ஒதுக்கப்படுவதை சாடிப்பேசினர், சென்னையின் முன்னாள் பிரதமர், ஓமந்தூரார். வடவரின்ஆட்சிக்கு கட்டியம் கூறுவதிலே முதலிடம் பெறும் 'சுதேச மித்திரன்' ஏடு, பசு ஒன்றிற்கு சென்னை மாநிலம் தீனியைப் பதைப் போலவும், வடக்கத்திய ஆயன் ஒருவன் பாலையெல்லாம் கறந்து செல்வதைப் போலவும் கேலிச் சித்திரம் தீட்டிக் காட்டியது. ஆவடிக் காங்கிரசின் வரவேற்புக் குழுத் தலைவராய் இருந்த அம்புஜம் மாள்கூட, 'பெரிய பெரிய தொழிற்சாலைகளும், வேலைத்திட்டங்களும் உருவாக்கப் படுவதில், இந்த மாநிலத்திற்குரிய பங்கு கிடைக்கவில்லையே'—என்று கண்ணீர் வடித்திருக்கிறார். அத்தகையோரெல்லாம், கண்டவயால்—உதட்டு இடுக்கால்—சந்தர்ப்பத்தின் கட்டாயம் காரணமாக மொழிந்தவற்றைத்தான் இப்போது வெளிப்படையான கண்டனக் குரலாக்கி, அதை டில்லியிலுள்ளோர் கேட்குமளவுக்குச் செய்யவேண்டும் என்று பேரூர் பொதுக்குழு முடிவு செய்திருக்கிறது:

வளம்—அங்கே!

கண்ணீர்க் குளம்—இங்கே!

வாழ்வளிக்க வற்றாத ஜீவநதிகள் வெட்டப்படுகின்றன, வடக்கில்!

வரண்டுபோன பாலை நிலத்திலே, நன்றாக வாழ்ந்த நிலையை எண்ணி ஏங்குகிறார்கள், தெற்கில்!

ஆலைகள் — அங்கே உற்பத்தியானதைச் சந்தைக்குக் கொண்டு செல்ல நல்ல சாலைகள்-இவையெல்லாம் தென்னகத்திலா? அல்ல; அல்ல; தெக்கணத்திற்கு அப்பால்தான் அந்த 'இந்திரலோகம்'!

பொன்னும், மணியும் பெருக சுரங்கங்கள் தோண்டப் படுகின்றன, அங்கே! பஞ்சடைந்த கண்ணும், ஆபிரங் கண்ணுடைய துணியும்தான், இங்கே, தென்புலத்துச் செல்வனின் 'செழிப்பு'க்குச் சாட்சி சொல்கின்றன!

இங்கே ஒரு 'சிந்திரி' உண்டா? டில்லியிலே இருப்பதைப் போல டி. டி. டி. உற்பத்தி நிலையம் இருக்கிறதா? சேலத்திலே இரும்பு இருந்தும், நெய்வேலியிலே நிலக்கரி கிடைத்தும், ரூர் கலாவில் உள்ளதைப்போல், ரஷ்ய உதவியோடு மத்தியப் பிரதேசத்தில் அமையப் போவதைப்போல், இரும்பு ஆலை ஏற்படுத்துவதற்கு திட்டவட்டமான முயற்சிகளாவது செய்யப்படுகின்றனவா?

அவர்களுடைய கண் துடைக்கும் வேலைகளோடு, இவைகளுக்கெல்லாம் நமக்குக் கிடைக்கும் ஒரே பதில்— "இல்லை; இல்லை; இல்லை;"—என்பதுதான்!

வடக்கை வளம்பெறச் செய்யும் ஐந்தாண்டுத் திட்டத்திற்காக 2,500 கோடி ரூபாய்களை செலவு செய்திருக்கிறார்கள், உலக பாங்கியிலிருந்து கடன் வாங்கியுள்ளார்கள். அமெரிக்காவிலிருந்து, டாலர் துரைகளின் தயாதாட்சண்யத்தால் உதவி வேறு கிடைக்கிறது! சர்வாதிகார நாடுகளைத் தவிர்த்து, ஜனநாயக நாடுகளிலே அமல்

○ தொடர்ச்சி 4-ம் பக்கம்

### மித்திரனின் சித்திரம்!




"வட இந்தியர் நமது செல்வத்தைப் பறித்துக் கொண்டு போவதாக எனது நண்பர் ஈ. வே. ராமசாமி நாயக்கர் கூறுகிறார். அது உண்மைதானென்று எனக்கு தோன்றுகிறது. அவர்கள் இங்கு வந்து வியாபாரம் செய்து பணம் திரட்டுகின்றனர். ஆனால், நமக்கு அவர்களுடைய உதவி தேவையிருக்கும் போது அவர்கள் நம்முடன் ஒத்துழைப்பதில்லை." (சி. ஆர்.)

— "சுதேசமித்திரன்" 7—8—52

★ 3-ம் பக்கத் தொடர்ச்சி

# உலக விளம்பரத் திட்டம் - - ஆனால், உதவாக்கரைத் திட்டம்!

செய்யப்படும் முதலாவது திட்டம் என்று 'தம்பட்டம்' போடுகிறார்கள்!

ஒதுங்கி இருந்து வேடிக்கை பார்ப்பதையே வாடிக்கையாகக் கொண்ட ரஷ்யாகூட, 'நல்ல அளவுக்கு இந்தியாவின் முதல் ஐந்தாவது திட்டம் பலன் தந்திருக்கிறது—இதனால் இந்தியரின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது' — என்று வெளிப்படையாகப் புகழ்ந்திருக்கிறது!

சீனத்தின் பிரதமர் சூ—என்—லாயுக்கு வரவேற்பு நடத்தி, 'பேப்பர் திட்டத்தை'க்காட்டி, நற்சாட்சிப் பத்திரம் பெறுகிறார்கள்!

டிட்டோவுக்கு பாக்குவைத்து, அவர் தலையசைப்பதிலே பூரிப்பு பெறுகிறார்கள்!

ஆக, இப்படியெல்லாம் அகில உலகமெங்கும் நன்றாக விளம்பரமாகியிருக்கும் ஒரு திட்டத்தை எதிர்த்து நாம் கண்டனநாள் நடத்தப் போகிறோம். கண்ணீர் பெருக்கெடுக்கும் நிலையிலே, விம்மலும், வேதனையும் ஒருங்கே தோன்ற, மாற்றாந்தாயின் கோரமான செயலினைக்கண்டிக்கும் குழந்தையின் போக்கிலேதான் நம்முடையகண்டனமும் அமைந்திருக்கிறது. எவ்வளவு கேவலமான நிலைமை, நமக்கு? எங்களுக்குரிய பங்கு எங்கே என்று பிச்சை கேட்கும் அளவுக்கு தென்னகம் தாழ்ந்து விட்டது.

இந்தக் கேவலமான போக்கு நமக்கு மட்டுமல்ல; ஒரு அரசாங்கம்—அதுவும், மானிட சிப்பிக்குள்ளே மறைந்து கிடக்கும் ஒரே ஒரு முத்துப் போன்றவராம் நேரு துரைமகனாரின் அரசாங்கம், நாட்டினரின் ஒரு பகுதி மக்களை அலட்சியப்படுத்தும் அளவுக்கு திட்டம் தீட்டியிருக்கிறதே என்று வெளிநாட்டவரெல்லாம் இழிந்துரைக்கும் அளவுக்கு, இந்தக் 'கேவல நிலைமை'யில் மோதிலால் மைந்தரின் அரசாங்கமும் பங்கு பெறுகிறது!

மார்ச் 20-ந் தேதியை ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாளாக பொதுக்குழு தேர்ந்தெடுத்திருக்கிறது. தி. மு. கழகப் பேச்சாளர்கள் ஒவ்வொருவரும் மாதமொன்றிற்கு நான்கு கூட்டங்களுக்குமேல் கலந்து கொள்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான மக்களை — வேறெந்தக் கட்சியிலும் கூட்டமுடியாத ஜனத்திரளை-ஒவ்வொரு பொதுக் கூட்டத்தின்போதும் அவர்கள் சந்திக்கிறார்கள். தென்னகத்திலேயே அதிக அளவு மக்களுடன் உறவு வைத்திருக்கும் நம்மால் இது போன்ற காரியங்களை வெற்றி கமழும் வகையிலே செய்துகாட்ட முடியும். அதுவுமன்றி, நாம், மக்களுடன் கட்சி ரீதியில் கலந்து உறவாடும் செயல்களிலே பல முறை ஈடுபட்டிருக்கிறோம்.

கைத்தறித் துணிகளைத் தோளிலே சுமந்து, வீதிகளிலே விலைகூறி வந்த போது, தென்னகத்து வீடுகளின் ஒவ்வொரு படிக்கட்டுகளிலும் நம்முடைய பாதங்கள் பட்டிருக்கின்றன!

பொதுச் செயலாளரின் அறிக்கைக் கிணங்க, ஆணவக்காரர்களின் தலைவராம் ஆச்சாரியாரின் குலக்கல்வித் திட்டத்திற்கு பொது மக்களிடையே நிலவி இருந்த எதிர்ப்பை எடுத்துக்காட்ட பட்டி தொட்டிகளிலெல்லாம் கூட்டங்கள் போட்டது மட்டுமன்றி; ஊர்வலமாகச் சென்று, அந்தந்த வட்டாரத்து எம். எல். ஏ. க்களைச் சந்தித்து, மகஜர் தந்திருக்கிறோம்! அதற்குப் பிறகும், அந்தக் கெடுமதியாளர் தன்னுடைய எண்ணத்தை மாற்றிக்கொள்ளாத காரணத்தால்தான் அவ்வளவு விரைவில் அவர் அழிந்துபோனார்!

இந்திய அரசாங்கம் தென்னாட்டவர்க்குச் செய்திருக்கும் அநீதியை உலகெங்கணும் எடுத்துரைக்க கழகக் காளையர் ஒவ்வொருவரும் **20—3—55** ஐப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். தெற்கு வஞ்சிக்கப்படுகிறது என்பதை உணர ஆரம்பித்திருக்கும் மற்ற கட்சித் தோழர்கள்கூட கண்டனக் கூட்டங்களுக்கு ஒத்துழைப்பு தர முன் வருவார்களேயானால், நாம் ஆச்சர்யப்பட மாட்டோம். அன்று நிறைவேறும் தீர்மானங்களை அவ்வப்போது டில்லி அரசாங்கத்திற்கு அனுப்பிவிடுங்கள்.

தென்னகத்தில் இன்றையதினம் உருவாகியிருக்கும் சூழ்நிலைகளை நோக்கும்போது, டேராடுன் சிறைச்சாலையில் இருந்தபடி தன்னுடைய புதல்வியாருக்கு மோதிலால் மைந்தர் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி தான் நம்முடைய நினைவிற்கு வருகிறது:

"தூக்கத்தில் உழல்பவர்களும், அந்நிய ஆட்சியின் கீழ் அகப்பட்டுக் கொண்டு தவிக்கும் நாடுகளும், இன்னும் நிகழ்காலத்தில் தங்களுடைய மனோரதம் நிறைவேறாத காரணத்தால் சந்தோஷம் என்பதையே அறியாத எல்லோரும், இறந்த காலத்தையே எண்ணி ஏங்குபவர்களாய், அதிலிருந்து ஆறுதல் பெற முயற்சிக்கிறார்கள்... நிகழ்காலத்தைத் துன்ப இருள் கவிழ்ந்து நிற்கும்போது பழமையே ஊக்கமும், ஆறுதலும் தந்து உதவுகிறது. ஆகவே, அவர்கள் பழமையிடம் சரண்புகுகிறார்கள்... இவ்வாறு எப்போதும் சென்ற காலத்தையே நோக்குவது ஒரு தேசத்தின் **நோயுற்ற மனப்பான்மை**யையே காட்டுகிறது. நல்ல நிலையிலுள்ள ஜனங்களும், தேசங்களும் நிகழ்கால்த்தில் தாங்கள் செய்ய வேண்டிய கடனை ஆற்றி, அவை பலன்தரும் எதிர்காலத்தை நோக்கி நிற்பார்கள். ஆனால் சுதந்திரத்தை இழந்து அடிமைப்பட்டுக் கிடக்கும் தனி மனிதனோ, அன்றி ஒரு தேசமோ, நல்ல நிலையில் இருப்பதாகச் சொல்ல முடியாது. ஆகவே, அம்மனிதனோ, அன்றி அந்தத் தேசமோ இறந்த காலத்தையே நோக்கிக்கொண்டு இறந்த காலத்திலேயே வாழ்வது இயற்கையே!"

நேரு குறிப்பிடும் அந்த நோயுற்ற நிலையிலேதான் நாம் இருக்கிறோம்; இறந்த காலத்திலேதான் வாழ்கிறோம்! வில் சின்னம் பொறித்து, தருக்கு மிக்கோரின் தலை அழுந்த கனக விசயர்களை கல் சுமக்கவைத்து, இமயம் சென்று மீண்ட சேரன் செங்குட்டுவன் தீரம் பற்றிதான் தினந்தினம் பாடிக் கொண்டிருக்கிறோம். சங்கும், மீனும் உலவும் தென்னகத்துக்கடற்பரப்பிலே அன்று வர்த்தகம்முடித்து, பண மூட்டைகளுடன் தாயகம் திரும்பும் பாய்மரங்கள் எங்கே? காய்ந்து போன சருகுகளாய். களை இழந்த முகத்தினராய் காட்சிதரும் இன்றைய மீனவர்கள் எங்கே?—இப்படிப்பட்ட உவமைகளை எண்ணும் போது நமதுள்ளம் குழைகிறது.

மேருவைச் சேர்ந்த பகுதிகளிலே இரத்தினச் சுரங்கமும், தங்கக் கனிகளும் இருந்தனவாமே; அந்தச் சுரங்கங்களிலே சீனதேசத்து அவுணர்கள் கூலிகளாய் வந்து—எறும்புகளாய் அணிவகுத்து—மண் தோண்டுவோர்களாமே; இதனால் அவர்களுக்கு 'பொன் தோண்டி எறும்புகள்' என்றுகூட பெயர் அமைந்ததாகவெல்லாம் இலக்கியங்களில் படித்திருக்கிறோமே-அன்று ஏழைகளாய், உழைப்பைத் தவிற வேறொன்றுமறியா மோழைகளாய் இந்நாடு வந்த சீனர்கள் எங்கே?

நம் நெஞ்சு நெக்குருகுகிறது-நமக்கு முன்பு சிரம் குனிந்த சீனர்கள், இன்று சிகப்புக்கொடி கட்டி, புதுவாழ்வின் உச்சியிலே—பொதுவுடமையின் அணைப்பிலே, இருந்துகொண்டு நம்மைப் பார்த்து கேலி செய்கிறார்கள்.

முன்பொருநாள் நாற்பெரும்படையுடன் சென்று, ஈழம் வென்றோம்; கடாரம் கொண்டோம். அன்று நாம் அடிமை கொண்ட ஈழம் தான் விரைவிலே குடியரசாகப் போகும் இலங்கை அரசு! அந்த நாளில் நாம் நசுக்கித் துவைத்த கடாரம்தான், காமன்வெல்த் அமைப்பில்கூட சேராமல், ஒதுங்கி இருந்து உயர்வுடன் வாழும் பர்மா!

நம் காலடியில் கிடந்த அந்த நாடுகளிலே உள்ள தேயிலைத் தோட்டங்களிலேதான், கட்டத்துணியுமின்றி, அந்தக் கானகத்திலே புள்ளிமானைப்போல் அலைந்து; நட்டுவாக்களி, பூரான், அட்டை கடித்து அலறித்துடிக்கும் திராவிடச் சேய்களைத் தத்தம் செய்திருக்கிறோம்.

இங்குள்ளோர் எல்லாம் இந்த நிலையிலே வாடும்போதுதான், நேரு குறிப்பிட்டபடி, நலன் கொழிக்கும் திட்டங்களைப் போட்டு வடக்கத்தியர் அவை பலன்தரும் எதிர்காலத்தை நோக்கி நிற்கிறார்கள்.

நாம், நோய்ப் படுக்கையில் கிடக்கிறோம்—அவர்களோ, காய் முதிர்ந்து, கனி அறுவடை செய்யும் காலத்தை எண்ணியிருக்கிறார்கள்!

வியாதி தீர-வடவர்கள் நம் உடலிலே ஏற்றியிருக்கும் விஷம் அகல—கசப்பான மருந்தாக இருந்தாலும் அதை உட்கொண்டு தீர வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது—நமக்கு!

மருந்தை வயிற்றுக்குள் வழியனுப்பும் முடிவுக்கு வந்த பின்னர், வைத்தியருக்கு நாம் அனுப்பும் அழைப்புதான் மார்ச் 20-ந்தேதியன்று நாம் எழுப்பப்போகும் கண்டனக் குரல்!

அந்தக் குரல், மாபெரும் சக்தியாக வளர்ந்து, நம்மைக்கொடுமை செய்வோரின் குரல்வளையை நெறிக்கட்டும்!

## ஆசிரியர் மு. க. உடல்நிலை

★

சென்ற வாரம் எழும்பூர் கண் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மு. க. அவர்கள் இன்னும் அங்குதான் தங்கியிருந்து சிகிச்சை பெறுகிறார். வியாழக்கிழமையன்று அவர் கண்ணிலே மேஜர் ஆபரேஷன் ஒன்று செய்யப்பட்டது. நேற்று அதற்கான தையலையும் பிரித்துவிட்டார்கள். பூரண ஓய்வு தேவை என்று டாக்டர்கள் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்கள்.

காதல் சித்திரம்

# மூன்று தோட்டாக்கள்!

:— எஸ்.எஸ்.தென்னரசு —:

"ருடால்ப்! ஆஸ்திரியாவின் அரச கௌரவம்—அந்நியரால் எள்ளி நகையாடப்படுகிறது. பெற்ற மகனை அடக்க முடியாத கொற்றவன்' தன்னை பேரரசு என பறைசாற்றிக் கொள்வது நீதியா என்கிறார்கள்' வெளிநாட்டார். தாயகத்தின் பெருமை தேயத்தான் வேண்டுமா? உள் நாட்டுக் குழப்பத்தால் ஒளிவீசும் ஆஸ்திரிய சிங்காதனத்தை இழக்கச் சொல்கிறாயா? பெல்ஜியத்தின் பேரழகியாம் ஸ்டெப்பனியை உனக்கு இல்லறத் துணைவியாக்கினேன், நீ, கள்ளத்தனமாக காமக்குளத்தில் மூழ்கித்திரிகின்றாய்! ருடால்ப், வேண்டாமடா மகனே, அந்தப் பாசாங்குக்காரியை -பாரோனெஸ் மேரியை விட்டுவிடு—மறந்துவிடு! போ, அந்தப்புரத்திலே அழகு மயிலாள் — அரசர்குல ஆரணங்கு உனக்காகக் காத்துக் கிடக்கிறாள், சென்றுவா; செல்வனே.!"—பிரான்ஸ்ஜோசப் இப்படிப்பல முறை தன்மகனை வேண்டிக் கேட்டுக் கொண்டிருக்கிறான். தந்தையின் கட்டளைக்குப் பயந்து, தன் சிந்தையில் குடியேறிய சிங்காரச் சிட்டுகளை விரட்டியடித்தவர்கள் மன்னர் பரம்பரையிலே மிகக்குறைவு. போதை மகிழ்ப்பேசி, கோதையரின் குங்கும இதழ்களைச் சுவைத்துக் கூடாக்கிவிட்டு எட்டி உதைத்திடும் எத்தர்களின் பட்டியலில் இடம் பெறவில்லை ருடால்ப்!

ருடால்ப், மேரிக்காக ராஜ மரியாதைகளை இழக்கச் சித்தமாக இருந்தான். சலவைக்கல் மண்டபங்கள் தேவையில்லையென சக்கரவர்த்தியிடமே பலமுறை சொல்லியிருக்கிறான். "மேரியோடு நான் வாழமுடியும்: இந்த ருடால்பை மேரி விரும்பியது ராஜகுமாரன் என்பதற்காக அல்ல! செல்வக் குடும்பம், நாம் சீராக வாழலாம் என்ற சபலத்தாலுமல்ல. 'ஆகவேதான் நான் மேரியை மனமார விரும்புகிறேன் — அவளை மனைவியாக்கிக் கொள்ளவும் துணிந்துவிட்டேன்" என்று ருடால்ப், தன் தந்தையிடமே வாதாடியிருக்கிறான். ஆனால் கருத்தொருமித்த அந்தக் காதல் புறாக்களை வெறிபிடித்த வேடன் ஒருவன் கொன்றுவிட்டான்—ஒளிந்திருந்து அம்பெய்தி அந்த உயிர்ச்சித்திரங்களின் ஆவியைக் குடித்துவிட்டான். பொன்முடியும் — பூங்கோதையும், பாரசீகத்து லைலாவும், கயசும் ஒருமித்து உருவெடுத்த அந்த உண்மைப்பாத்திரங்கள் செத்து மடிந்தார்கள்.

கொன்றது யாராக இருக்கும்?

தன் சொல்லைத் தட்டிவிட்டானே என்று தந்தையே கொன்றிருப்பாரா?

மனைவியாக நானிருக்க, மாற்றாளோடு இன்பந் துய்க்கிறாரே, என்று ராணியே ஆத்திரம் மேலிட்டுக் கொன்றிருப்பாளா?

"காதலுக்கு இந்த உலகத்தில் மதிப்பில்லை, ஆகவே நாம் வாழவேண்டாம்" என்று மனம் வெதும்பி தாங்களே தற்கொலை செய்து கொண்டிருப்பார்களா?

✶

1880!

ஆஸ்திரிய ஹங்கேரிய ராஜ்யத்தை பிரான்ஸ் ஜோசப் ஆண்டு வந்த காலம் அது! ருடால்ப், ஜோசபின் செல்வக் குமாரன், வாரிசுக்கோர் திருவிளக்கு! பெல்ஜியத்து அழகு ராணியை-பெரிய இடத்து இளவரசியை தன் மகனுக்கு மணம் முடித்து வைத்தார் சக்கரவர்த்தி ஜோசப். நல்ல இடத்தில் சம்மந்தம் செய்து விட்டோம் என்ற மகிழ்ச்சியும், பெல்ஜியத்திற்கும், ஹங்கேரிக்கும் நிலவிவந்த மனத் தகராறு செத்துவிட்டது என்ற பூரிப்பும் ஜோசப்பை இன்பக் கடலில் ஆழ்த்திற்று. திருமணத்தை நிறைவேற்றி வைத்துவிட்டால் பெற்றுவளர்த்த கடனில் தலையாய கடன் தீர்ந்துவிட்டதாக தந்தைமார் கருதுகின்றனர். அரசவம்சமானாலும், கல்யாணம் என்பது பஞ்சணை, பால், பழவர்க்கம் இவைகளுக்குள் மட்டும் அடங்கியதல்ல என்பதை ருடால்ப் அறிந்திருந்தான். மன்னர் பரம்பரையினரின் முன்னிலையில், மாதா, பிதா தேர்ந்தெடுத்த அந்த மணப் பெண்ணுக்குப் பக்கத்தில் ஒரே ஒரு நாள் --அதுவும் அந்தத் திருமண நாளிலேதான் ருடால்ப் அமர்ந்திருந்தான். விழாவுக்குப் பிறகு விழியெடுத்துக்கூடப் பார்க்கவில்லை அந்த பெல்ஜியத்து ஸ்டெப்பினியை! ஸ்டெப்பினி என்ன சுடுமூஞ்சியா? அல்லது கண்டோரை காவி உடையைத் தேடி ஓடவைக்கும் கோர உருவம் கொண்டவளா? அல்லவே! அவளோ, அரசகுலத்தில் பிறந்தவள்-அந்தப்புரத்தில் வளர்ந்தவள் பாங்கியர் புடைசூழ, பத்துக் குதிரை வண்டிபூட்டி பழக்காடு சுற்றிவரும் பேரழகுப்பெட்டகம்! அவளைத்தான் திரும்பிப் பார்க்கவே மறுத்தான் ருடால்ப்—அந்த இன்பவல்லிக்குத்தான் அன்பைத் தெரிவிக்க அடியோடு மறுத்துவிட்டான், எட்டாண்டுகள் ஓடிவிட்டன! அதுவரை ருடால்பின் வாழ்க்கை? வழுக்கி விழவில்லை—பிறவனிதையரைக் கைப்பற்றி இழுத்து தன் கௌரவத்திற்குக் கரைபூசிக்கொள்ளவில்லை; காட்டு மாளிகையும் வேட்டைத் தொழிலும் அவனுக்கு கால ரதத்தின் சாரதிகளாக இருந்தன.

1888!

பாரோனெஸ் மேரி என்பாள், கிரேக்க நாட்டு அழகு தேவதையின் அச்சுப் பதுமையோ என ஐயுறும் வண்ணம் ஆஸ்திரியாவில் வளர்ந்து வந்தாள். பருவ எழில் ததும்பும் அந்தப் பதினாறுவது பிராயத்திலேதான், இருபத்தி ஒன்பது வயது பெற்ற ருடால்ப் அவளுக்கு இதயராஜனானான். ருடால்பும், காந்தச்சிலையின் கன்னக் கதுப்புகளில்தான் உலகம் இருப்பதாகச் சொன்னான். செங்கோலேந்த வேண்டும், சிங்காதனம் அமரவேண்டும் என்போரெல்லாம் காதல் நல்லாளின் கனிரச இதழ்களைச் சுவைத்துப் பார்த்திராதவர்கள் என்று பேசினான்.

ருடால்பின் எதிரிகள் தான் அவர்களைக் கொன்றிருப்பார்கள் என்று கருதுவதற்கும் இடமில்லை. காரணம், ருடால்ப் அந்நாட்டு மக்களின் அன்புக்கு பாத்திரமாக விளங்கினான்; பூஜைக்குரிய தெய்வத்தைப் போல கூட நேசித்தார்கள் அவனை.

தந்தை ஜோசப்பும் கொன்றிருக்க முடியாது. ருடால்பின் மீது தந்தைக்கு உயிர். மேலும் ருடால்ப்தான் பட்டத்தின் வாரிசு.

மேரிதான் தன் காதலனைக் கொன்றிருப்பாள் என்றும் கருத முடியாது. ஈருடல்—ஓருயிர் அவர்கள் இருவரும்.

சொந்த மனைவியும் இந்தக் கொலை பாதகத்தைச் செய்திருக்க மாட்டாள். எப்போது வருவான் மணாளன் என்று எதிர்நோக்கி இருந்தவள் அவள்.

தற்கொலையும் இல்லை—மருத்துவர்களும் சொல்லி விட்டார்கள்.

ஆனால் இது யார் செய்த வேலை?

நகரில் தூற்றல் அதிகரித்தது. நாடாளும் சக்கரவர்த்தியின் மகன் நாதியற்ற பெண்ணொருத்தியோடு கூடிக்கொண்டு கும்மாளம் அடிக்கிறானே, என்று வசைபாட ஆரம்பித்து விட்டார்கள். இந்தக் கிண்டல் பேச்சும் கேலி உரையாடல்களும் ஜோசப்பின் காதுக்குஎட்டிவிட்டன. தர்பாரிலே வைத்துக் கண்டித்தால் தலைக்கு மிஞ்சி பேசி விடுவானோ என்று அஞ்சி மன்னன் ஜோசப் ருடால்பை அரண்மனைக்கு வரவழைத்து கெஞ்சினான். பிறகு வேண்டிக் கேட்டுக் கொண்டான்—கண்டித்தான்; கனல் கக்கினான். ருடால்ப் விட்டுக் கொடுக்கவில்லை. "மேரி என் ஆவித்துணைவி" 'மேரியைஎன் உள்ளத்திலிருந்து அகற்றுவதென்றால் மேரியை மட்டும் நீக்க முடியாது. என் இதயத்தையே என் உடலிலிருந்து நீக்கத்தான் வேண்டும்' என்று சொல்லி விட்டான்.

"ருடால்ப்!"–ஜோசப் கண்களை மூடிக்கொண்டு கத்தினான்.

"அப்பா! முடியாது! முடியவே முடியாது அப்பா!"—என்று சொல்லிவிட்டு அரண்மனை அகன்றான். அதன்பிறகு கொஞ்சநாள் ருடால்ப்-மேரி-சந்திப்பு ஊர் வாய்க்கு அகப்படாத ஓர் வனாந்திரப்பகுதியில்—வியன்னாவிலிருந்து முப்பது மைல் தொலைவிலுள்ள ஒரு அன்னாசித் தோட்டத்தில் நடைபெற்றது.

★

திடீரென்று ருடால்பின் வேட்டை முகாமில் அன்று மூன்று வேட்டு சப்தம் கேட்டது. அவை மூன்றும் துப்பாக்கிக் குண்டு வெடித்த சப்தம்தான்! வெளியில் சென்றிருந்த அவன் நண்பர்கள் பிலிப்பும், கவுண்ட் ஹொயசும் முகாமிற்குள் விரைந்து பார்த்தார்கள். முகாமின்முதலறை ஒழுங்கற்றுக் கிடந்தது. சாமான் அடுக்குகள் சரிந்து கிடந்தன. பிராந்திப் புட்டிகள் நொறுங்கப் பட்டிருந்தன. நண்பர்கள் இரண்டாவது அறைக்குப் போனார்கள். செம்புள்ளி இட்டதைப் போல மரத் தூண்களெல்லாம் ரத்தம் தெளிக்கப் பட்டிருந்தது. வேட்டை உடையோடு ருடால்ப் கட்டிலிலே பிணமாகக்கிடந்தான். அவனுடைய மண்டை இரண்டாகப் பிளந்திருந்தது. நண்பர்கள் நடுக்கமெடுத்துப்போய், சுட்டவனை அறைமுழுதும் தேடினார்கள். அறையின் கோடியில் மயில் தோகைஎன கூந்தல் அவிழ்ந்து கிடக்க, ருடால்பின் காதலி மேரியும் பிணமாகக் கிடந்தாள். அவள் உடலில் எந்தக் காயமும் காணப்படவில்லை.

இந்த இரட்டைக்கொலை நிச்சயமாகத்தற்கொலையாக இருக்கமுடியாதென வாதித்தார்கள். ருடால்பின் தந்தை பிரேத பரிசோதனை செய்தபோது இதை. மூளைத்தாக்குதல் என்று சொல்லும்படி மருத்துவருக்குக் கட்டளையிட்டான். அந்த மருத்துவர்கள் மறுத்து விட்டார்கள். ஆனால் இந்த மர்மக் கொலை யாரால் நிகழ்ந்தது என இதுவரை எவராலும் கண்டு பிடிக்கப்படவில்லை. இந்த உண்மைக் காதல் காவியம் துக்க முடிவுக்கு வரக்காரணமென்ன? அந்த மூன்று தோட்டாக்களும் எந்தத் துப்பாக்கியிலிருந்து கிளம்பியவை? அந்தத் துப்பாக்கியின் விசையைத் தட்டிவிட்ட இருதயமற்ற கொடியவன் யார்?

★

## திருமணம்

தோழர் போளூர் சுப்ரமண்யம்அவர்களின் மகள் துர்க்காவிற்கும்,சென்னை தோழர் வாசுதேவனுக்கும், அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் 18-2-55-ம் தேதியன்று திருமணம் நடைபெற்றது. தோழர்கள் அ.பொன்னம்பலனார், கே.ஏ. மதியழகன், ப.உ. சண்முகம், கா. அப்பாதுரை, காஞ்சி. தங்கவேலர்,கோவிந்தசாமிஎம்.எல்.ஏ. தென்னரசு, திருவொற்றியூர் சண்முகம் எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

## நன்றி

அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் 18-2-55-ல் திருமணம் செய்து கொண்ட எங்களுக்கு வாழ்த்துச் செய்திகள், பரிசுகள் அனுப்பியவர்களுக்கும் நேரில் விழாவில் கலந்து வாழ்த்துரை வழங்கியவர்களுக்கும் எங்கள் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்கள்,
போளூர், துர்க்கா
சென்னை, வாசுதேவன்



# காட்டாறு

(சிறுகதை)

கதிர்வேலுவைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? ஒல்லியான திரேகம் - பாசிக்கொடியின் வேரைப் போல அழுக்கடைந்த ஆடை — முள்ளம் பன்றியைப் போல விரைத்து நிற்கும் தாடி— இவைகளோடு ஒரு உருவம் திருச்சி வீதிகளிலே அலைந்து கொண்டிருக்குமே, அந்த உருவத்தைத் தான் சொல்கிறேன்.

பாவம்! அவன் எப்படி வாழ்ந்தவன் தெரியுமா? காரிலேதான் செல்வான்; தும்பைப் பூ நிகர்த்த துணிகளைத்தான் கட்டுவான்; அவன் அணிந்திருக்கும் 'பூட்ஸ்'களிலே முகம் பார்த்து, தலை சீவிக் கொள்ளலாம்; அதற்கு 'பாலிஷ்' போட்டு அவ்வளவு பளபளப்பு ஏற்றியிருப்பார்கள், அவனுடைய எடுபிடிகள்! 'சில்க்' ஜிப்பாவை அணிந்துகொண்டு, சுளுக்கியைப்போல் கூர்விட்டிருக்கும் மீசையையும் திருகிவிட்டுக் கொண்டு தெருவிலே வந்து நிற்பானுனல் - அந்தத் தெருவிலே ஜன நடமாட்டமே இருக்காதாம்; உள்ளூரின் முடிசூடா மன்னனும் போலீஸ்காரன்கூட தொப்பியை கழற்றிக் கையில் வைத்துக் கொண்டு, ஒரு 'சலாம்' செய்து விட்டுத்தான் அப்பால் நகருவானும்.

மேலூரிலே இப்படியெல்லாம் கொட்ட மடித்தவர் பொருளாதாரத் துறையிலே சருக்கி ழ ஆரம்பித்ததும், உள்ளூரிலே தலை காட்ட வெட்கப்பட்டுக்கொண்டு குடும்பத்துடன் 'நாசுக்கான' வேலைதேட ஊர் ஊராக அலைய ஆரம்பித்துவிட்டார்.

கதிர்வேலு மட்டுமென்ன? இந்தத் தமிழர்களே அப்படித்தான். கையிலே நாலு காசு விளையாடும் வரை சொந்த நாட்டிலே சுற்றிக் கொண்டிருப்பார்கள். வெள்ளையப்பன் அஸ்தமித்ததும், உள்ளூரிலேஉழைத்துவாழ்வதற்கு வெட்கப்பட்டுக் கொண்டு வெளியூருக்கோ, அல்லது சிலோன், மலாயா போன்ற வெளிநாடுகளுக்கோ ஓடிவிடுகிறார்கள். இந்த அசட்டுப் பண்பை வளர்ப்பது போலத்தான், 'திரைகடலோடி திரவியம் தேடு' என்று பழமொழியொன்றையும் இயற்றி வைத்திருக்கிறார்களே! தமிழ்க் காப்பியத்தின் சருவூலமாய்த் திகழும் சிலப்பதிகாரத்தில்கூட கதாநாயகனும், கதாநாயகியும் சொந்த ஊரை விட்டு மதுரைக்கு ஓடிதானே பொருள் ஈட்டப் போனார்கள்!

தமிழினத்தின் இரத்தத்திலே ஊறிப்போன இந்தப் பண்பிற்கு கதிர்வேலு மட்டும் விலக்காக முடியுமா? அவன் வெளிநாடு செல்லாவிட்டாலும், வெளியூர் சென்றுவது வயிறு வளர்ப்பது என்று முடிவு செய்துதான் திருச்சி பக்கம் வந்தான்.

வாழ்க்கையைச் சகடக்கால் என்கிறார்கள்; இதை சன்யாசிகளின் சோம்பேறிக் கூற்று என்று ஒதுக்கிவிடுவதற்கும் இல்லை. எது எப்படியிருந்தாலும் குறுக்கு வழியிலே பெரிய மனிதர்களானவர்களுடைய போக்கு நிச்சயம் சகடக்காலைப் போலத்தான் இருக்கிறது. காட்டாற்றிலே திடீரென்று வெள்ளம் வருவதைப் போல சிலருடைய நிலையும் திடீரென்று உயர்ந்துவிடுகிறது. போர்க் காலத்தில் காளான்களைப்போல பணக்காரர்கள் தோன்றினார்களே, அதைப்போலத்தான். பின்னர் அவர்களுடைய முடிவே விளங்குவதில்லை.

கதிர்வேலுவின் இந்த நிலைக்கு, காலத்தின் கோளாறு என்று காரணம் கூறினார்கள். 'விதியின் விளையாட்டு'—என்றனர் சிலர். கதிர்வேலுக்குத் தெரியும், தன்னுடைய தலைகீழ் மாற்றத்துக்குக் காரணம் 'விதியின் விளையாட்டுஅல்ல'; வாலிபத்தின் விளையாட்டுதான் என்று! அவனுடைய செல்வத்தால் உயர்ந்த சிங்காரிகள் இன்றுகூட அவன் ஊரிலே நல்ல நிலைமையிலே உயிர் வாழ்கிறார்கள்.

ஊம்; விஷயத்திற்கு வராமல் நான் பாட்டிற்கு கதையளக்கிறேனே! திருச்சியிலே அவன் தங்கியிருக்கும் போதுதான் இடிமேல் இடி விழுவதுபோல அவனுக்கு பல இன்னல்கள் நேர்ந்தன. அவன் ஆசைக்குரிய மனைவியும், பலாச்சுளைபோல் இனிக்கஇனிக்க பேசிக் கொண்டிருக்கும் மூன்று குழந்தைகளும் காலராவுக்கு பலியானார்கள்.

பாவம், கதிர்வேல் அனாதையாக அலைந்தான். செலவுக்கு வைத்திருந்த சில்லரைக் காசுகள்கூட, மனைவி மக்களின் சவ அடக்கத்திற்கே சரியாகப் போய் விட்டது. இதுவரை பாடுபட முன் வராத திரேகம், இப்போது வேலை தேடி வீடுவீடாக அலைந்தது. அந்த பரிதாபத்திற்குறியவனை நீங்கள் பார்க்கவேண்டும் போலிருக்கிறதா? இதோ அவனைக் காட்டுகிறேன்.

★

தங்க ரேக்குகளைக் காட்டிக் காட்டி மறைத்துக் கொள்வதைப் போல், மின்னிக் கொண்டிருந்தது ஆகாயம். பொறாமைக்காரர் நெஞ்சம்போல முழங்கும் இடிகள். அதோடு வானமும் தவிடுபோல் சிறு, சிறு மழைத் துளிகளைக் கக்கிக் கொண்டிருந்தது. பளபளப்பான ஆடை அணிந்தோர், சலவையிலே புள்ளிகள் விழுமென்றெண்ணி ஓடிக்கொண்டிருந்தார்கள். முகத்திலே அழுந்தியிருக்கும் பவுடர் கரைந்து — சுயருபம் தெரிந்து விடுமேயென்று மங்கையர் சிலர் ஓடவும் முடியாமல் — தலையைத் தாழ்த்திக் கொண்டு ஓரத்துக்கு ஒதுங்கினார்கள்.

'இயற்கை பன்னீர் தெளிக்கிறது, அதை ஏற்றுக் சொள்ளாமல் ஓடுகிறார்களே; இளித்தவாயர்கள்'—என்று ஒரு முறை உறுமினன், கதிர்வேல், மழைத்தூரல் ஒவ்வொன்றும், அவன் உடலிலே மோதி, ஒவ்வொரு அணுக்களோடும் ஏதோ ரகசியம் பே கொண்டிருந்தது. அவன் வா கையிலும், இதைப்போல சுகம் தரும் பனித்துளிகள் வி தால்...? ஆனல் அங்கே தவி தூரலுக்குப்பதில் அடைமழை பெரும் புயலுமல்லவா சூழ்ந் கிறது! அதிலே அகப்பட்டு அ டையை ஆசை மாளிகையல் கரைந்து மேடாகிறது!

சாட்டையடி கொடுப் போல மின்னலின் வேகம் அ ரித்தது. தூரலும் கனமாக ஆரம்பித்தது. மழையிலே சட் யில் ஒட்டிக் கொண்டிரு அழுக்குத் திரள் யாவும் கரை நிறமில்லாத நீருக்கு பழுப் சாயம் பூசிக்கொண்டிருந்தது.

சாலையில் பொழிந்த நீ தாழ்வு நிலம் நோக்கி ஓடி தஞ் அடைகிறது. ஆனல், வாழ்க் யின் விண்ணிலிருந்து தவறி வி தவர்கள் மேட்டு குடிக தேடித்தான் பிழைப்பு நட வேண்டியிருக்கிறது. கதிர்வே யாராவது பெரியமனிதர் ஒரு நாடித்தான் பிழைப்பு நட வேண்டும்.

மணிப்பர்ஸ் கணமாக இ அந்தக் காலங்களில்கூட அ பத்திரிக்கைகளிலே படித்தி ருன்; பண்டிதரும், பாமரரும் அவனைப் பற்றிப் பேசிக்கொ வார்— ரங்கநாயகம்! அவரு கால்களைப் பிடித்தாவது, செ சிக் கூத்தாடி ஒரு வேலை வா வேண்டும் — என்கிற நினைவே தான் இப்போது கதிர்வே கொஞ்சம் வேகமாக நடந்த

ரங்கநாயகத்தைப்பற்றி உ ளிடம் சொல்லவில்லையே! ர நாயகம் லட்சாதிபதியல்ல; அ டியவர்களுக்கெல்லாம் பொ தவி செய்து திருப்திப்படு ஓரளவு வசதியோடு இரு கூட அவர் தன்னை ஒரு 'ச சேவகன்' என்று சொல் கொள்வதிலேதான் மகிழ் அடைகிறார். என்ன அப்படி மிதமான சமூக சேவை செ விட்டார் என்று கேட்கிறீர்க குட்டிச் சுவராகிவிட்ட இந்த கத்துக்கு அவர் செய்யும் தொ டும்-அந்தத் தொண்டு அறுவ செய்து குவிக்கும் பலனும் எ கும் அவருக்கும்தான் தெரியும்

ரங்கநாயகம் ஒரு அராஜக என்கிறார்கள். எனக்கென்ன அவரது கொள்கைகளை கோ




ஏட்டிலே படிப்பதைவிட, ஓவியமாகப் பார்ப்பதிலேதான் ஆபாசங்கள் நுட்பமாகத் தெரிய வருகின்றன. அழுக்கு மூட்டையாக— ஆபாசக் குட்டையாகக் காட்சி தரும் மகாபாரதம் இந்த இதழ்முதல் தொடர்ந்து சித்திரவடிவம் கொள்கிறது. இது முடிவுற்றதும் 'இராமாயணம்' போன்ற மற்றசாக்கடை ஏடுகளும் இதே தொடரில் வரிசையாக இடம் பெறும். (ஆ. ர்)

னாளைக்குக் கடைப்பிடித்தால் தான், இந்த நாட்டு மக்களுக்கு புத்தி வருமென்று தோன்றுகிறது.

கதிர்வேல் ரங்கநாயகத்தின் காலைக் கட்டிக் கொண்டு கண்ணீர் வடித்தான். "துரையே எனக்கு வழிகாட்டுங்கள், வேலை வாங்கிக் கொடுக்கா விட்டால் உங்கள் எதிரிலேயே உயிரை மாய்த்துக் கொள்வேன்......."—இப்படி என்னவெல்லாமோ சொல்லி ஒரு பெரிய சோக நாடகத்தையே அரங்கேற்றி விட்டான் கதிர்வேல்.

காதலி வடிக்கும் கண்ணீருக்கு உருகிவிடும் நாவல் காதலர்களைப் போல, ரங்கநாயகம் வேண்டுமானால் கதிர்வேலுவின் மனப் போராட்டத்தை உணர்ந்து கொண்டதாக நடிக்கலாம். ஆனால் வேலையென்றால் என்ன, சாம்பார் சாதப்பொட்டலமா? காசைக் கொடுத்தவுடன் அதை வாங்கி கதிர்வேல் கையில் கொடுப்பதற்கு?

ரங்கநாயகம் சாய்வு நாற்காலியில் சாய்ந்தவாறே யோசித்தார், புதுக்கருத்துக்களையும் புரட்சித் திட்டங்களையும் கொண்ட ரங்கநாயகம் அரும்பெரும் விவகாரங்களையெல்லாம் அரைநொடியில் முடித்து விடுவார். கதிர்வேலுவின் விஷயத்திலே் அவர் இவ்வளவு நேரம் யோசனை செய்வது எனக்கு வியப்பாக இருந்தது.

ஒரு சிகரட்டை பற்றவைத்தபடியே, "உனக்கு என்னவேலை தெரியும்?" என்றார்.

கதிர்வேலு விழித்தான். இதற்கு என்ன பதில் சொல்வதென்றே விளங்கவில்லை, ஏதாவது தொழில் செய்திருந்தால் அல்லவா அவனால் பதில் சொல்ல முடியும்? இருட்டிலே தொங்கும் வௌவாலைப் போல அவன் முதுகிலே இது வரை வெய்யிலே பட்டதில்லை.

நாக்கிலே எச்சலை கூட்டிக் கொண்டு, "கொஞ்சநாள் கள்ள மார்க்கட்டிலே சிலோன் பிசினஸ்' செய்த பழக்கமிருக்கிறது. போலீசாருக்கு பயந்து மலமுறை அலைகடலிலே நீந்தி, தப்பியிருக்கிறேன். நான் நிழலிலே வளர்ந்த மாடு-வாழ்ந்து கெட்டவன். என்ன வேலை கொடுத்தாலும் செய்யத்தானே வேண்டும், சார்!"—என்று குணமாகப் பேசினான் கதிர்வேல்.

தனியாக இருக்குப்போது-ஆற்றங்கரைத் தென்றலைச் சுவைக்கும்போது—அவர் சேர்த்துவைத்திருந்த தத்துவங்களை யெல்லாம் உடனே அவிழ்க்க ஆரம்பித்தார் ரெங்கநாயகம்.

"இதோ பார், கதிர்வேல்! நீ வாழ்ந்து கெட்டவன் என்கிறாய். குப்பைமேட்டில் இருப்பவன் கோபுரத்திற்குப் போனால் அதைப் பற்றி நாம் கவலைப் படவேண்டியதில்லை; வரவேற்போம். ஆனால், கோபுரத்தில் இருப்பவன் குப்பை மேட்டிற்கு வந்துவிட்டால்தான் அவன் படும் கஷ்டங்களை நம்மால் பார்க்கச் சகிப்பதில்லை. வாழ்ந்து கெட்டவன் மறுபடியும் உயிர் வாழவே விரும்பக்கூடாது, கதிர்வேல்"—என்று ஒரு ஆவேசமான சொற்பொழிவையே நிகழ்த்தினார்.

"சரி கதிர்வேல், நான் சொன்னால் கேட்கமாட்டாய், நாளை மாலை என்னுடன் காப்பி சாப்பிடுவதற்கு வந்துவிடு, நீ நன்றாக வாழ்ந்தபோது சுவைத்த அறுசுவைகளையும், நாளையும் நாம் சாப்பிடுவோம். பின்னர் சிறிது நேரம் உலாவப் போவோம். அப்போது உன்னுடைய வருங்காலம் பற்றியும், உன்போன்ற வேலை தேடி அலையும் ஆயிரக்கணக்கான வாலிபர்களின் வருங்காலம் பற்றியும் தீர யோசித்து, ஒரு முடிவுக்கு வருவோம்"—இப்படிச் சொல்லி விட்டு ரங்கநாயகம் நகர்ந்துவிட்டார்.

★

மறுநாள்—பொழுது புலர்ந்து பகலெல்லாம் போதாகி—மாலையும் வந்தது. கதிர்வேலு பல மாதங்களுக்குப் பிறகு அன்று வயிற்றை நிறப்பிக் கொண்டு முதல் முறையாக பற்கள் தெரிய சிரித்தான், காவேரிக் கரை ஓரத்திலே அவர்கள் உலவிவந்தார்கள்.

"சரி, கதிர்வேல்! உனக்கென்றே ஒரு வேலை தேடிவைத்திருக்கிறேன், எடுத்த எடுப்பிலேயே எழுபத்தைந்து ரூபாய் சம்பளம் வாங்கித் தருவதாக என் நண்பர் சொல்லியிருக்கிறார்... ஆனால் ஒரே ஒரு நிபந்தனை... அக்கரையிலே அந்த நண்பர் நின்று கொண்டிருக்கிறார்... அவருக்கு நன்றாக நீந்தத் தெரிந்தவர்தான் வேண்டும்...இதோ காவிரியைத் தாண்டிச் சென்று அவரை நீ பார்த்தால், உடனே உன்னை வேலைக்கு வைத்துக் கொள்வார்!" அதற்குமேல் ரங்கநாயகம் பேசவில்லை. அக்கரையைப் பார்க்க கைநீட்டினார்.

நிபந்தனையைக் கேட்டவுனேயே கதிர்வேலுவின் உடலெல்லாம் வியர்த்தது. ஒருமுறை கர்ஜனை புரிந்துஓடும் காவிரி வெள்ளத்தைப் பார்த்தான். அதிலே வளைந்து, வளைந்து நிற்கும் சுழல்களைப் பார்த்தான்; ஒரு முறை தன்னுடைய கைகளையும் பார்த்துக் கொண்டான்..

"அன்று நான் கடலிலே நீந்திய போது உரம் வாய்ந்த நெஞ்சோடு இருந்தேன். பட்டினி கிடந்து என் கைகளிலே வலுவில்லை. இப்போது எப்படி நான் ஆற்றைக் கடப்பது"—என்று கேட்பதுபோல் இருந்தது, அவன் ரங்கநாயகத்தைப் பார்த்த பார்வை!

ரங்கநாயகம் அக்கரையைப் பார்க்க நீட்டிய விரலை இன்னும் மடிக்கவில்லை "சுழலுக்கு பயந்தால் சுகம் கிடைக்குமா?"—என்கிற கேள்விக் குறியை எழுப்பியது அவரது பார்வை.

'சட்'டென்று குதித்தான். காவிரியில்...சீற்றம் புரியும் சுழல், இரத்தம் குடிக்கும் முதலைகள்—இவைகளைப் பற்றியெல்லாம் கதிர்வேல் கவலைப்படவில்லை,

★ தொடர்ச்சி 12-ம் பக்கம்

★ முரசொலி ★

விபரம் விரைவில்!



சீறியடிக்கும் ஆடிக்காற்றே! யாரைப் பயமுறுத்துகிறாய்? சிம்மாசனம் ஏறியிருப்போரின் சினத்தை விடப் பெரியதோ உன் சினம்! அதையே அனுபவித்தவன் நான். உற்றார், உறவினர், மனைவி, மக்கள், தாய், தந்தை, நண்பர், யாரும் என்னுடன் இருக்கக் கூடாது என்று தடை போட்டவர்கள், உன்னை மாத்திரம் உள்ளே அனுப்பி வைத்த ரகசியந்தான் என்ன! வெளியிலே அவர்களின் வெறி பிடித்த தர்பாரை நான் காண முடியாது என்பதற்காக உன் உருவிலே அந்தத் தர்பாரை எனக்குக் காட்டுகிறார்களா என்ன!

ஆடிக்காற்றே! மரங்களை ஏன் இப்படி ஆட்டிவைக்கிறாய்? மந்திரவாதி பேயோட்டி வைப்பது போல ஏன் ஆட்டிவைக்கிறாய்? மந்திரிமார்கள் மக்களை ஆட்டிவைப்பது போல ஏன் ஆட்டிவைக்கிறாய்? ஏன் வாட்டி வதைக்கிறாய்? என்ன குற்றம் செய்தன அந்த மரங்கள்? செழித்தது தவறா? சீர் தந்தது தவறா? மறுமலர்ச்சி பெற்றது தவறா? மணந்தரும் பூக்களை, கிளைக் கொண்டைகளில் சூட்டி நின்று சௌந்தர்ய மோகினிகளாய்க் காட்சி தந்தது தவறா? எது தவறு? ஏன் தண்டிக்கிறாய்? ஆடிக்காற்றே! அந்தக் காரணத்தைச் சொல்! சொல்ல மாட்டாய்! உன்னைப் போன்ற அரசாங்கமும் எங்களுக்குக் காரணம் சொல்லவில்லை! ஆடிக்காற்றே! மண்ணை அள்ளிக் கண்ணில் போட்டால் பயந்து விடுவோமா? கண்ணீர்ப் புகை பிரயோகத்தை விட கடுமையானதா உன் கைகள் வாரியிறைக்கும் மணல் துளிகள்! மதில் தாண்டிவந்து மந்தி போல் குதிக்கும் ஆடிக்காற்றே! சிறைச்சாலைக்கு வந்த பிறகுமா என்னை நீ சித்திரவதை செய்ய முயலவேண்டும்! என்ன; பதில் பேசாமல் பயங்கர மூச்சு விடுகிறாய்?

சர்வாதிகாரிகள் உன்னைப் போலத்தான் அகோர இரைச்சல் போட்டார்கள். அராஜக வெறியாட்டம் நடத்தினார்கள். அவர்களும் நீயும் ஒரே ரகம். அந்த உண்மையை நீயும் ஊளைத் தொனியில் பாடிக் காட்டும் ஆடிக்காற்றே! பொறு! பொறு! ஆடி ஓய்ந்ததும் அடங்கிவிடுவாய். அடங்கிய பிறகு, உன்னைப்போல ஆட்டம் போட்ட அரசாங்க நண்பனை—அந்தரங்கத் தோழனை சந்திக்கப் போவாய்! அய்யோ பாவம்; அப்போது அவன் உனக்கு முன்னே பொந்துக்குள் போயிருப்பான்!

போ போ, மண்ணை வாரி
இறைத்துப் போ

# 1947 - 1954!

அன்று....

ஓயாத, ஒழியாத வேலை!

மூச்சு விடக்கூட நேரமில்லை.

இயந்திரத்தின் 'கடகட'ச் சத்தம்வேறு — அதற்கே வெறுப்பைத் தருகிறதுபோலும்...

ஆனால் வேறு வழி?

விடிவதற்குள் 250 கொடிகள் தைத்துக் கொடுக்க வேண்டுமே!

'வெள்ளித் தோட்டா'வின் 'கிண்கிணி' நாதமானது இயந்திரத்தின் 'கடகட' சத்தத்தைக்கூட அடக்கிவிட்டது. அதுதான் ஒரு நிம்மதி! காசுக்காக உற்சாகமாக வேலை செய்யலாமே......!

வெற்றிமணி வந்துசேர்ந்தான். நன்கு அறிமுகமான இளைஞன். இங்குதான் கல்லூரியில் படிக்கிறான். வழக்கமாக அவனுக்கு வேண்டிய உடைகளைத் தைத்துக் கொடுப்பது நான் தான்.

"பாண்டியா! எங்கள் மாணவர் மன்றத்துக்கு நாளைக்கு 500 மூவர்ணக் கொடிகள் வேண்டும்" — வெற்றிமணி சொன்னான்.

"தோழரே! கொஞ்சங்கூட ஒய்வில்லை. இன்னொருமுறை யாகட்டுமே......"

"நான் போகாத இடமில்லை. அப்படிச் சொன்னால் முடியாது—கட்டாயம் வேண்டும்"—அவன் கெஞ்சினான்.

"எல்லாருமா கொடி தைத்துக் கொண்டிருக்கிறார்கள்?"

"ஆம் எல்லாரும்தான் தைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

வெற்றிமணி கூறியது உண்மைதான். நகரிலுள்ள தையற்காரர்கள் எல்லோரும் கொடிகள் தைத்துப் போடுவதில் முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்தனர்.

"நண்பா! எனக்குக்கூட ஒழிவேயில்லை. உதவிக்காக நான்கு ஆட்களை வைத்திருக்கிறேன். இருந்தாலும் எனக்கு நேரம் கிடைப்பது சிரமம்தான்'

'அப்படிச் சொன்னால் முடியாது. கட்டணம் அதிகமாக வேண்டுமானாலும் தருகிறேன்'

'இரண்டு மடங்கு தரவேண்டும்'

'கட்டாயம் தருகிறேன்' — வெற்றிமணி உறுதியாகக் கூறினான்.

இரவு முழுவதும் வேலை செய்தாக வேண்டும் — பின் வேறு வழி!

முடிசூடா மன்னர் ஜவகர்லால் நேரு நாளைக்கு இவ்வூர் ரெயில்வே ஸ்டேஷன் வழியாகப் போகிறார். நகர மக்கள் கல்லூரி மாணவர்கள் கூடி நின்று மூவர்ணக் கொடி பிடித்து அவரை வரவேற்று வாழ்த்தி வழியனுப்புவர்.

★

1954—

ஏழாண்டுகள் கடந்துவிட்டன!

இன்றும் அதேபோல் மூச்சுவிட நேரமில்லை.

ஓயாத இரைச்சல் கேட்டுக் கேட்டு சலிப்பேற்பட்டு விட்டது. வேறு வழியில்லாததால் உட்கார்ந்து வேலை செய்ய வேண்டியிருக்கிறது. நாளைக் காலைக்குள் 500-க்கு மேற்பட்ட கொடிகள் தயார் செய்தாகவேண்டும்.

அதோ, வெற்றிமணிதான் வருகிறான்போல் தெரிகிறது

அவன் சொன்னான்: 'எங்கள் இளைஞர் கழகத்திற்கு ஆயிரம் கொடிகள் வேண்டும்'

நானும் முன்பு சொன்ன பதிலையே சொன்னேன்: "நண்பரே ஒழிவே இல்லையே...'

ஏழாண்டுகளுக்குமுன் கேட்டதுபோலவே இன்றும் கெஞ்சினான்: "யாருக்குமே ஓய்வில்லை...எல்லாரிடமும் போனேன். கடைசியாகத்தான் இங்குவந்தேன், கூலி எவ்வளவு வேண்டுமானாலும் தருகிறேன்"

அன்றைக்குப் போலவே இரட்டிப்புக்கூலி கேட்டேன். வெற்றிமணி ஒப்புக்கொண்டான்.

நிகழ்ச்சியும் பழையது போலவேதான். பாரதப் பிரதமர் ஜவகர்லால் நேரு நாளைக்கு இவ்வூர் ஸ்டேஷனைத் தாண்டிச் செல்வார் ஊர் பொதுமக்களும் மாணவர்களும் கையில் கொடிபிடித்து பெருந் திரளாக ஸ்டேஷனில் கூடி நிற்பர். எல்லாம் முன்போலவேதான்.

ஆனால் ஒரே ஒரு மாற்றம். இம்முறை மூவர்ணக்கொடியல்ல; எல்லோர்கைகளிலும்—**கருப்புக் கொடி!**

# வாதம் செய்வோம்!

இந்த இந்திய உபகண்டத்தை, காங்கிரஸ் ஏகாதிபத்தியத்தினிடம், வெள்ளையர்ஏகாதிபத்தியம் ஒப்படைத்து எட்டாண்டுகளாகின்றன. ஆனால் வெள்ளையர்கள், இந்தியாவின் சுதந்திரத்தை காங்கிரசின் தியாகத்திற்காக அஞ்சிக் கொடுத்து விட்டுப் போய்விடவில்லை. இந்தியத் துணைக் கண்டத்தின் பொதுஎதிரியாக விளங்கிய வெள்ளையர் ஏகாதிபத்தியத்தை முதலில் விரட்டி அடித்து விடவேண்டும் என்ற நோக்கில் இந்தியத் துணைக் கண்டத்து மற்ற அரசியல் கட்சிகளெல்லாம்காங்கிரசோடு ஒத்துழைத்தன. அந்த நேரத்தில் அகில இந்தியக் கட்சியாக இருந்த காங்கிரஸ், சுதந்திரப் போராட்டத்திற்கு தலைமை தாங்கியது. அதன் காரணமாகத்தான் வெள்ளையர் சுதந்திர சாசனத்தை காங்கிரஸ் மூலவரிடம் கொடுத்தனரே யன்றி காங்கிரஸ்தான் இந்த நாட்டின் சுதந்திர இயக்கம் என்று எண்ணியல்ல! அப்படி எந்த காங்கிரஸ் கனவான்கள் எண்ணியிருந்தாலும் அதை இப்போதே திருத்திக் கொள்வது உத்தமம்—அதுதான் நீதியுமகூட. இதோ அண்ணா சொல்கிறார் கேளுங்கள், "எல்லைப்புறத்திலே கபார்கான்,

"வெள்ளைக்காரன் மக்களின் விடுதலை ஆவத்தைப் பார்த்து உலக சூழ்நிலையைக் கவனித்து இந்தியாவை விட்டுப் போனான். ஆட்சி வடவர் கையில் சிக்கிற்று. ஆனால் வடநாட்டு ஏகாதிபத்தியம் தென்னாட்டை அடிமைக் காடாக்கி, சாவடியாக்கி, சந்தையாக்கி வருகிறது; வடவர்கள் அப்படி என்ன, ஆற்றலில் சிறந்தவர்களா? வீரத்தில் திளைத்தவர்களா? வடநாட்டான் தோற்றான் என்று தானே சரித்திரம் கூறுகிறது. கிரேக்க அலெக்சாண்டர் வந்தான்—செங்கிஸ்கான் வந்தான்—தைமூர் வந்தான் கஜினி வந்தான்—அனைவரும் வடநாட்டை வென்றார்கள் என்று தானே சரித்திரம் கூறுகிறது. கட்சியின் சார்பாக கட்சியின் பொதுச் செயலாளர் சாட்டுகிறகுற்றச்சாட்டு இதுதான், இதை புனைகதை என்றுயாராவது கூறமுடியுமா? தென்னாட்டு வரலாற்றில் தமிழ் வேந்தர்கள் தோல்வி கண்டார்கள் என்ற வரிகளை பார்த்ததுண்டாயாராவது? பிறகெப்படி, தோல்வி கண்டவர்கள் வெற்றிகண்டவர்களை அடக்கியாள்வதை நாம் அனுமதிக்க முடியும் கோழைபா வீரனை ஆள்வது? அவர்கள் தரும் இன்னல் இழிவுகளை அனுபவிப்பது? தென்னாடு

# பூதக் கண்ணாடி ஏன்?

பாஞ்சாலத்திலே லாலாலஜபதிராய், மகாராஷ்டிரத்திலே லோகமான்யத் திலகர், சென்னையிலே ஆச்சாரியார், சேலத்திலே டாக்டர் வரதராஜுலு நாயுடு, ஈரோட்டிலே பெரியார் ராமசாமி என்று நாடெங்கும் தலைவர்கள் கிளம்பி தொண்டர்களைத் திரட்டி 60 000க்கு மேற்பட்டவர் சிறை சென்ற, அதற்குப் பிறகுதான் சுயராஜ்யம் கிடைத்தது" இது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை நீங்கள் ஒப்புக் கொண்டுதானாக வேண்டும். பொது எதிரி கப்பலேறி விட்டான்—வெள்ளையன் போய்விட்டான்—இனிமேல் கொண்டு உள்நாட்டு தகராறுகளுக்கு ஒரு சுமூகமான முடிவு காணவேண்டியது — காணமுற்படுவது தானே ஜனநாயகம். ஆனால் அந்த ஜனநாயகம் தான் இங்கு மரணவேஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கிறது! புலியைக் கொள்ள புசருக்கு தன்னோடு வந்தவர்களையெல்லாம் மறந்துவிட்டு புலித்தோல் எனக்குத்தான் என்கிறது காங்கிரஸ்சர்க்கார். அறிஞர் அண்ணா அவர்களின் பாணியிலே சொன்னால், "நேரு காவியணியாத பண்டாரமாக இருந்து கொண்டு சுயராஜ்ய ஆசனம் எங்களுடையது" என்கிறார். இது ஒப்புக் கொள்ளக் கூடிய வாதமா?

பிரியவேண்டுமென்பதற்கு மூலகாரணமே அது தானே!

நிலவரி, விற்பனைவரி இரண்டும் நீங்க, வருமானவரி, ரப்பர், புகையிலை, தேயிலை, காப்பி, தீக்குச்சி வரிகள், ரயில், ஆகாய விமான வருமானம் ஏற்றுமதி இறக்குமதி வரி, கடலோர வாணிபவரி அத்தனையும் டெல்லிக்கு, இப்படி இருந்தால் தென்னாடு வாழ்வது எப்படி என்று கேட்கிறோம். எங்களது நாட்டில் வசூலாகும் பணம் எங்களுக்குத் தான் சொந்தமென்று கேட்பது குற்றமானால் அதற்கு எத்தகு தண்டனை என்றாலும் ஏற்றுக் கொள்வோம். சட்டப் புத்தகத்தை கையில் வைத்துக் கொண்டு போராட்டத்தில் குதிப்பவர்களல்லர் நாங்கள். சர்க்காரோடு போராடித்தான் தீரவேண்டுமென்ற முடிவுக்கு வந்து விட்டால் கழுவிலேற்றுவரா, தூக்குக் கயிறு வரை தண்டனை கிடைக்குமா, என்றுஎண்ணிடும் தொடை நடுங்கிகளும் அல்லர்!

இறுதி வெற்றி நம்பக்கம் தான் என்பது நமக்கு நன்கு விளங்குகிறது. காரணம், வெள்ளையனை விரட்டுவதற்குக் காட்டிய காரணங்களைக் காட்டிலும், தென்னாடுபிரிய வேண்டும் என்பதற்கான காரணங்

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்




## ★ மாணவர் மன்றம் ★

### சிங்கக் கம்பிகளே! தங்கக் தங்கைகளே!

போர் உலகைக் கொல்லும்; நோய் ஆளைக் கொல்லும்; ஆனால்.........இந்தப் பொருமை இருக்கிறதே, அது மன நிம்மதியைக் கொன்று விடும்; மகிழ்ச்சியை அழித்துவிடும்; நினைக்கும் போதெல்லாம் வேதனை தந்து வேடிக்கை பார்க்கும்.

அந்தப் பொல்லாத பொருமைக்கு ஆளாகி—பின் புத்தி வந்த ஒரு தம்பியின் கதை இவ்வாரம் வருகிறது. சென்னைத் தங்கை நித்திலக்குமரி எழுதியுள்ள அக்கதை பொருமை நெஞ்சத்தோருக்கு ஒரு பொருத்தமான பாடம். படியுங்கள்.

★

அந்தி நேரம் — ஆற்றங்கரை ஓரம்—அங்கே ஒரு மூலையில் தனியாக உட்கார்ந்திருக்கிருன் சேகர். அவன் கண்களில் கலக்கம்—முகத்திலே வாட்டம்—ஒரே சோகம்! ஏன்? இந்தக் கேள்வியை அவனிடமே கேட்டால்...? முதலில் பதில் சொல்லத் தயங்குவான்; பயப்படுவான்; பின் வேதனையும் வெட்கமும் அவனைப் பிடுங்கித் தின்னும்! இருந்தாலும் கேட்போமே!...இதோ, சேகரும் பதில் சொல்லுகிறுன்; கேளுங்கள்:

"நான் ஒரு மாணவன். எட்டாவது வகுப்பில் படிப்பவன். எனக்கு விளையாட்டுகள் என்றால் ரொம்ப விருப்பம். ஏன், பள்ளிக்கூட போட்டிகளில் எல்லாம்கூட நான்தான் முதலாவதாகவிருப்பேன். ஆனால்...படிப்பில் நான் கொஞ்சம் மட்டம்; மக்கு! என்ன செய்வது? அதிக நேரம் படிப்பதென்றாலே எனக்கு வேம்பாக இருக்குமே!

ஆனால், என் சித்தப்பாவின் மகன் மணி இருக்கிருனே, அவன் எனக்கு நேர் விரோதம். படிப்பில் படுசுட்டி. வகுப்பிலேயே அவன் தான் முதல் பையன். இத்தனைக்கும் அவன் என்னைவிட வயதில் சிறியவன். அவனைப் பார்க்கும்போதெல்லாம்—அவனைப் பற்றிக் கேட்கும்போதெல்லாம்எனக்குவெட்கமாக இருக்கும். "மணிதான் மணியான பையன்; நூற்றுக்கு நூற்றுப் பத்து மார்க்கும் வாங்கி விடுவான் போலிருக்கிறதே!' என்று மற்றவர் அவனைப் புகழ்வார்கள் அல்லவா, அப்போது எனது வெட்கம் பொருமையாகவும் மாறும்!

இப்படியிருக்கையில் அந்தப் பொருமை புது உருவம் எடுக்கும் நாளும் வந்தது. நானும் முட்டாளாகும் சமயம் வந்தது.

பள்ளியில் மாணவர் மன்றம் ஒன்று ஏற்படுத்தினுர்கள். அதற்கு செயலாளர் வேண்டுமல்லவா, 'ஆகவே, யாரைச்செயலாளராக்குவது?' என்ற கேள்வி எழுந்தது. எனது அரட்டை நண்பர்கள் 'சேகர்தான் அதற்குத் தகுதியானவன்' என்றுர்கள். எனக்கு ஒரே மகிழ்ச்சி! ஆனுல்...சற்று நேரத்தில் அந்த மகிழ்ச்சி மறைந்தது. ஏன் தெரியுமா? "செயலாளர் பதவி சாதாரணமானதல்ல; ஆகவே அதற்கு ஒரு தேர்தல் நடத்த வேண்டும்; சேகரை எதிர்த்து மணி போட்டியிடப்போகிருனும்" என்று சொல்லிவிட்டார் தலைமை ஆசிரியர். 'மணி' என்ற சொல் காதில் பட்டதும் எனக்கு கோபம் 'குபீர்' என்று கிளம்பியது. இருந்தாலும் பொறுத்துக் கொண்டேன். 'வெற்றி எனக்குத்தானே' என்ற நம்பிக்கை எனக்கு.

ஆனுல்...தேர்தல் நாள் நெருங்க நெருங்கஅந்த நம்பிக்கைகுறைந்து கொண்டே வந்தது. எனக்கும் ஒரே பயமாக இருந்தது. என் பக்கத்திலே மாணவர் கூட்டம் மிகமிக குறைவு. அவர்களும் விளையாட்டுப் பித்தர்கள்; வெறும் அரட்டைக் கூட்டம்! ஆனுல் மணியைச் சுற்றியோ நிறைய மாணவர்கள். அத்தனை பேரும் புத்தகப் புலிகள்! இந்த நிலைமையைப் பார்க்கப் பார்க்க என் கோபம் அதிகரித்துக் கொண்டே போயிற்று.

நண்பர்கள் புடைசூழ மணி நடந்து செல்வான். நான் சாலை ஓரத்தில் நின்று முறைப்பேன். என் உதடுகள் என்னை அறியாமல் முணுமுணுக்கும்; "அவனைத் திட்டும்! அதைப் பார்த்தும் பாராதவுக மணி போய்க் கொண்டிருப்பான். அவனது கூட்டத்தில் ஒரே குதூகலமாயிருக்கும் — கொண்டாட்டமாயிருக்கும்!

தேர்தலுக்கு இன்னும் இரண்டு நாட்கள்தான் பாக்கி. என் உடல் படபடத்துக் கொண்டிருந்தது. 'நான் தோற்று விடுவேனே?'—இப்படி நினைக்கும் போது என்னை என்னவோ செய்தது. அழுகைகூட வந்து விட்டது. ஆனுல் அழுது தான்என்னபலன்? வெற்றி மணிக்குத்தான் என்பது நிச்சயமாகிவிட்டது. என் பக்கத்திலிருந்த நண்பர்களும் ஒவ்வொருவராகக் குறைந்தனர். எனக்கு ஒரே ஆத்திரம்; அவமானத்தைத் தாங்கமுடியாதே என்ற கோபம்!

'ஐயோ! மணி வெற்றி அடைந்து விட்டால்......? அந்தப் பொடியனின் முன் நான் தலைகுனிவதா? அப்பப்பா! அவமானம்! அவமானம்!'-என்று எண்ணினேன். மணியின் மேல் பொல்லாத கோபம்—எல்லையில்லாத ஆத்திரம்! இப்படி எண்ணி எண்ணிப் புழுங்கிக் கொண்டே பள்ளிக்கூட வாசலில் நடந்து கொண்டிருந்தேன். அப்போது... என் கோபத்தை அதிகமாக்கும் நிகழ்ச்சி ஒன்று நடந்து விட்டது. மணி தனியாக பள்ளியிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தான். சாதாரணமாக அல்ல என்னைப் பார்த்து சிரித்துக் கொண்டே! அது என்ன ஏளனச் சிரிப்பா? — கேலிப் புன்னகையா? எனக்கு ஒரே கோபம். அவன் சிரிப்பு என் சினத்தை அதிகமாக்கியது. நான் என்னை மறந்தேன். 'தோற்பதற்கு முன் இந்தப் பொடியனுக்கு சரியான பாடம் கற்பிக்கிறேனு, இல்லையா, பார்!' என்று கருவினேன். மணி என்னை நோக்கி வந்தான். ஏதோ பேசுவதற்கு வாயைத் திறந்தான். ஆனுல் என்னத்தைச் சொல்ல...? என் கோபம் என் அறிவை மூடிக் கொண்டது; பொருமை என் கண்களை மறைத்துவிட்டது. நான் அவன் மேல் மிருகம் போல பாய்ந்தேன். 'பளார்......பளார்' என்று அறைந்தேன். அடித்தேன். மணி 'ஐயோ' என்று அலறினுன். நான் ஏன் அதை கவனிக்கப் போகிறேன்?...மீண்டும் அடித்தேன். கண்டபடி திட்டினேன். என் கைகள் ஓய்ந்தன......மணி விக்கி விக்கி அழுதான்.நான் அதை கவனிக்கவில்லை. சற்று நேரம் மௌனமாக நின்றேன். பின் என்னவோ யோசித்தேன். ஒரு முடிவுக்கு வந்தேன். வெறிபிடித்தவனைப் போல பள்ளிக்கூடத்தை நோக்கி ஓடினேன்.

தலைமை ஆசிரியர் தன் அறையில் இருந்தார். ஓடிவந்து எதிரே நிற்கும் என்னைப் பார்த்ததும் அவர் திடுக்கிட்டுவிட்டார். பிறகு "வாப்பா, மாணவர் மன்ற செயலாளரே, என்ன விஷயம்?" என்றுர். நானுேபடபடப்புடன், "சார்! நான் செயலாளர் தேர்தலுக்கு நிற்கப் போவதில்லை! ஆமாம்; நான் போட்டியிடப் போவதில்லை சார்! தயவு செய்து என் பெயரை

● தொடர்ச்சி 10-ம் பக்கம்

## ★ சிறிய வயதிலே ★

### சபதம்!

ஒரு பெரிய மாளிகை—அதற்குள் ஒரு அழகான அறை—அங்கே ஒரு அலங்காரக் கட்டில்—அதிலே படுத்துக்கொண்டிருந்தான் ஒரு பையன். அவன் கையில் ஒரு புத்தகம். ஆமாம்; அவன் படித்துக் கொண்டிருந்தான். அந்த சமயத்தில் திடீரென்று தெருவில் ஏதோ இரைச்சல் கேட்டது. பையன் திடுக்கிட்டான். எழுந்தான். வாசலுக்கு ஓடிவந்தான். அங்கே...!

கண்ணைப் பறிக்கும் காட்சி ஒன்று நடந்துகொண்டிருந்தது. அவன் 'அப்பாடா' என்று வாய்விட்டுக் கூவினுன். 'டமர... டமர...டம்' என்று ராணுவ வாத்தியம் முழங்க — 'நம் படை வெல்க! வாழ்க!' என்று மக்கள் கூச்சலிட — 'ஜாம் ஜாம்' என்று சென்றுகொண்டிருந்தது போர்ப் படை! சண்டைக்குச் செல்லும் அந்த வீரர்களின் அணிவகுப்பை, அந்தப் பையன் கண் கொட்டாமல் பார்த்தான். அவன் கண்கள்தான் பார்த்துக் கொண்டிருந்தன. ஆனுல் அவன் மனமோ...எங்கேயோ அலைந்து கொண்டிருந்தது. அவன் மனக்கண் முன்னே மடியிலே படுக்க வைத்துக் கொண்டு, தன் தாயார் சொல்லிய வீரக் கதைகள் எல்லாம் நினைவுக்கு வந்தன. சற்றுநேரம் மௌனமாக நின்றுன். மறுகணம், திடீரென்று கத்த ஆரம்பித்தான். "நான் பாதிரியாக மாட்டேன்! என் அப்பாவைப்போல் பாதிரியாக மாட்டேன்! யார் முயன்றுலும் நான் கட்டுப்பட மாட்டேன்! ஆனுல்... நான் பெரிய சேனுதிபதியாவேன்! கொடிகள் பறக்க — வாத்தியம் முழங்க—மக்கள் வரவேற்க—வாழ்த்து கூற—நானும் ஒரு நாள் லண்டன் நகரத் தெருக்கள் வழியாக படைக்குத் தலைமை தாங்கிச் செல்வேன்!" என்று கத்தினுன்.

அவன் கூக்குரலைக் கேட்டு எல்லோரும் சிரித்துக் கொண்டு போனுர்கள். ஆனுல், இரண்டாவது உலக யுத்தத்தில் ஜெர்மன் படைகளை சின்னுபின்னமாக்கிய இங்கிலாந்தின் படைத் தளபதிகளில் முதல்வனுக நின்றுன் அவன். பன்னிரண்டு வயதிலேயே அப்படி ஆர்வம் கொண்ட அந்த பெர்னுர்ட் மாண்ட்கோமரியை உலகம் போற்றுகிறது!

## ★ பெரிய மனிதர்கள் ★

## அறிமுகம்



### கேரளத்துக் கொக்கு!

விலங்குகள் உலவும் காட்டிலே அரசாங்கம் கிடையாது. மனித சமுதாயம்தான் ஒழுங்குபெற அமைந்த அரசாங்கத்தை அமைத்து, உரிமையைப் பறிகொடுக்காமல் சட்டத்துக்கு அடங்கி வாழ்கிறது. எனவேதான், "மனிதன் ஒரு அரசியல் மிருகம்" —என்றான், அரசியலுக்கு இலக்கணம் வகுத்த உலகப் பேரறிஞன் அரிஸ்டாட்டில்.

இருபதாம் நூற்றாண்டில் கூட அரசியல் மேடையிலே கொடும் புலியின் உறுமலையும், குள்ளநரியின் ஊளைகளையும் கேட்கமுடிகிறது. அடங்கி ஒடுங்கும் ஆமைகளையும், எதற்கெடுத்தாலும் கைநீட்டி, வாய்பொத்திநிற்கும் ஒட்டச்சிவிங்கிகளைப் பார்க்க முடிகிறது.

ஜனநாயகம் தளிர்விடும் இன்றைய நாட்களிலே அரசியல் வட்டாரத்தில் செறுக்கோடு உலவும் மிருகப் பண்பைத்தான், சர்வேஸ்வரனை துணைக்கழைத்து சதி வேலைகள் நடத்தும் சாணக்கியம் என்கிறோம்; ஆணவப் பறை கொட்டி, அடக்குமுறை செய்யும் ஆச்சாரியாரிசம் என்கிறோம். இத்தகைய கொள்கைகளின் வழி வந்தோர்தான் இதோ காட்சிதரும், **கோவிந்தமேனன்.** இந்தக் கேரளக் கொழுந்தை பனம்பள்ளி என்று சொன்னாலே எல்லோரும் புரிந்துகொள்வார்கள்.

பட்டம் தாணுப்பிள்ளையின் கொட்டமடக்கி இப்போது புதிதாகப் பட்டத்துக்கு வந்திருக்கும் திரு-கொச்சியின் பிரதமர், இவர்! சூழ்நிலைகள் கட்டாயப் படுத்தினால் பின்னணியிலே மறைந்து, பின்னர் சமயம்பார்த்து முன்னணிக்குத் தாவி, அரசியல் துறையிலே டார்வின் தத்துவத்தை உண்மையாக்குகிறார்.

பொது மக்களிடையே செல்வாக்கு குறைகிறது என்கிற நிலை பிறந்ததும் பிரதமர் பதவியை ஜானுக்குத் தந்துவிட்டு, கெட்ட பெயர் அனைத்தும் அவருக்குக் கிடைக்கட்டும் என்று ஓடி ஒளிந்துகொண்டார். பின்னர், தேர்தலுக்குப் பிறகு, பட்டம் தாணுவுடன் கூட்டு சேர்ந்து வளர்ந்த பனம்பள்ளி எதிர்க்கட்சியின் தலைமைப் பொறுப்பைத் தாங்கும் அளவுக்குக் குறைந்தார். அந்த இடைக்காலமும் இப்போது கலைந்தது. பனம்பள்ளியை விழுங்கியிருந்த தாணுப்பிள்ளை என்னும் கிரகணம் மறைந்தது. ஒருமீன் ஓடி, ஒருமீன் வருமளவும் வாடி இருந்த கோவிந்தமேனனும் கேரளத்துக் கொக்கு மீண்டும் இப்போது பதவி மீனைக் கொத்தி விட்டது!

## அருளாநந்தருக்கு......

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

உடலிலே உள்ள சதைகளை கழித்துவிட்டு ரத்தத்தை வடித்துவிட்டு வெறும் எலும்பு உறுவாக மாறிய பின்புதான் காரைக்கால் அம்மையாருக்கு சிவபெருமான் மோட்சம் கொடுத்தார்.

தமிழனுக்கு மானம் பெரிது, அந்த மானத்தை அடகு வைத்து தன் அருமை மனைவியை பரமசிவனோடு பள்ளி அறைக்கு அனுப்பிய பிறகுதான் இயற்பகை நாயனாருக்கு பரமசிவன் மோட்சம் கொடுத்தார்.

முழங்கையை சந்தனக் கட்டைக்குப் பதிலாகத் தேய்த்து பரமசிவனுக்கு பூஜை செய்தபிறகுதான் மூர்த்தி நாயனாருக்கு பரமசிவன் மோட்சம் கொடுத்தார்.

சிவனுக்காக சேமித்துவைத்திருந்த நெல்லை, பஞ்ச காலத்தில் அந்த நெல்லை தின்ற குற்றத்திற்காக, தன் தாய்—தந்தை மனைவி-எல்லோரையும் கொன்ற பிறகுதான் சிவபெருமான் கோட்புலி நாயனாருக்கு மோட்சம் கொடுத்தார்

மேல் கண்ட சமயாச்சாரிகள், நாயன் மார்கள், சைவ மதம் வளரவும், வாழவும் பாடுபட்டவர்கள் தங்களுக்கு மோட்சம் கிடைக்க கையாண்ட கொடிய மானங்கெட்ட, முறைகெட்ட செயல்களை எண்ணிப்பார்க்கும் ஒருவர், சைவ மதத்தில் அகிம்சை இருக்கிறது, அன்பு இருக்கிறது. அறிவு இருக்கிறது என்று நம்பமுடியுமா?

அப்படியே நம்பி, தாங்களும் மோட்சம் அடைய சைவமதத்தின் பாதுகாவலர்களாக விளங்கிய நாயன்மார்கள் செய்தகாரியங்களை செய்கைகளைத் தாங்களும் செய்ய ஆரம்பித்தால் உலகத்தில் அறம் வளருமா? அறிவுதான் வளருமா? 15, இந்துக்கள் என்றால் யார்? இந்துக்கள் என்ற சொல்லுக்குப் பொருள் என்ன? சைவசமயம் இந்துமதம் இரண்டும் தோன்றிய காலம் எப்பொழுது?

தமிழர் சமுதாயத்தில் ஆரியர்களால் உண்டாக்கப்பட்டுவிட்ட இழிவுகளையும் ஜாதி கொடுமைகளையும், மதத்தின் பெயரால் ஆண்டவன் பெயரால் மக்களை ஏமாற்றி, மக்களை மாக்களாக ஆக்கிவரும் கொடுமைகளை எடுத்துச் சொல்லி, மக்களை நல்வழியில் நடத்திச்செல்ல வேண்டுமென்று ஆசைப்பட்டு, அந்த நல்ல எண்ணத்திற்காக தங்களால் இயன்ற அளவுக்கு பாடுபட்டு வருகிற சீர்திருத்தவாதிகளை தாங்கள் வெறுப்பதற்கு-திட்டுவதற்கு காரணம்? உங்கள் கொள்கைபடி நாங்கள் குற்றம் என்ன செய்தோம்? குன்றக்குடி அடிகளே' குற்றமென்ன செய்தோம்? கூறுவீர்களா? நீங்கள் கூறத்தான் வேண்டும். நீங்கள் எங்கள் கேள்விகளுக்குச் சொல்லும் பதிலுக்கு நாங்கள் எங்களுடைய நேர்மையான பதிலை மக்களுக்குச்சொல்ல சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். அதுதான் முறை! அதுதான் வழி! செய்வீர்களா? ஃ

## பிறைவானம்...

○ 9-ம் பக்கத் தொடர்ச்சி

அடித்துவிடுங்கள்!" என்று கூறினேன். எனக்கு ஒரேதுடி துடிப்பு!

ஆனால்...அதற்கு ஆசிரியர் சொன்ன பதிலைக் கேட்டதும் திடுக்கிட்டு விட்டேன். "சேகர், என்னஇது! நீயும் இப்படிச் சொல்கிறாய்? ஒரே புதிராக இருக்கிறதே! சற்று முன்புதான் மணி வந்தான்! 'என் அண்ணனுக்கு எதிராக நான் தேர்தலில் நிற்பது தவறு; நான் இப்போதுதான் உணர்ந்தேன். தயவு செய்து என் பெயரை அடித்து விடுங்கள்...சேகரையே செயலாளராக்குங்கள்' என்று சொல்லிப் போகிறானே, நானும் அவன்பெயரை எடுத்துவிட்டேன். நாளை நீதான் ஏகமனதாக செயலாளராகப் போகிறாய்!" என்றார்.

நான் 'ஆ' என்று கூவினேன். என் காதுகளையே என்னால் நம்ப முடியவில்லை. ஆசிரியரின் அறையிலிருந்து வெளியேவந்தேன். என் பொறுமைக் குணம்— மணியின் பெருந்தன்மை — இவைகளை நினைத்தேன். நினைத்தபடியே நடந்தேன். இங்கு வந்து உட்கார்ந்திருக்கிறேன். நான் எப்படி மணியைப் பார்ப்பது?—அவன் முகத்தில் எப்படி விழிப்பது? சொல்லுங்கள்; நீங்களே சொல்லுங்கள்......"

ஐயோ, பாவம்! சேகரின் கண்கள் கலங்கியே விட்டன. அழவும் தொடங்கிவிட்டான். நமக்கென்ன வந்தது? அழட்டும்-நன்றாக அழட்டும்—தவறு செய்தானே, தண்டனை வேண்டாமா? நாம் போகலாம்!

ஒரு வாரத்திற்குப் பிறகு மீண்டும் அதே ஆற்றங்கரை மணல் மேட்டில் சேகர் உட்கார்ந்து கொண்டிருந்தான். ஆனால் அன்று போல் அழுது கொண்டல்ல; சிரித்த படி! ஏன்தெரியுமா? அவன் பக்கத்தில் அப்போது மணியும் இருந்தான். அது மட்டுமல்ல; சேகர்தான் மாணவர் மன்ற செயலாளராம்! மணிதான் அவனுக்கு உதவியாம். இந்த அண்ணனும் தம்பியும் இப்போது இணைபிரியாதவர்கள். அவர்கள் இருவரும் கையைக் கோர்த்துக் கொண்டு தெருவில் நடந்து செல்வதைக் கண்டு எல்லோரும் மூக்கில் விரலை வைக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

**— சொர்ணம்**

## வாதம் செய்வோம்......

★ 8-ம் பக்கத் தொடர்ச்சி

*கள் எந்த வகையிலும் குறைந்தவையல்ல!*

*இந்த விளக்கத்தை ஊர் ஊருக்கு எடுத்துரைத்து நாட்டின் குறை தீர்க்கத்தான் கிளை அமைக்கிறது, தி. மு. கழகம், தி. மு. கழகத்தைப் பற்றி புரிந்து கொள்ளாதவர்கள் 'பூதக்கண்ணாடி' பிடித்துக் காட்டி கழகத்தைப்பற்றி தவறான கருத்தைப் பரப்புவதைக் காட்டிலும், முதலில் அவர்கள், கழகத்தைப் புரிந்து கொள்வதே அறிவுடைமை யாகும்!*

★

## அறிமுகம்



### எத்தனை வாரமோ?

புதுக் கல்வித் திட்டம் சட்டசபையிலே ஓட்டுக்கு வரும் போது, பொறுப்புணர்ந்த தலைவரெல்லாம் சபைக்கு வராமல் குலதர்ம திட்டம் தற்காலிக வெற்றி பெற மறைமுகமாக உதவினார்களே, சில 'மகானுபாவர்கள்' அவர்களை உங்களுக்கு நினைவிருக்கிறதா? அந்தக் கம்யூனிஸ்ட்கள் தான் பிரான்சிலே நடைபெற்ற நல்லவர் ஆட்சியையும் கவிழ்த்தார்கள்.

எந்தக் கம்யூனிஸ்ட்கள் முதலில் மெண்டஸ் பிரான்சுக்கு ஆதரவளித்தார்களோ, அவர்களே அவருக்கு குழியும் பறித்தார்கள்!

பிரான்சு நாட்டு அரசியல் இருக்கிறதே, அது ஆந்திர அரசியலை விட மிகவும் சிக்கலானது-எந்தக் கட்சிக்கு,எப்போது'மெஜாரிட்டி' என்று யாராலும் சொல்ல முடியாது. எத்தனை நாளுக்கு தங்கள் கட்சி அதிகாரத்தில் இருக்கும் என்று அந்தக் கட்சித் தலைவர்களுக்கே தெரியாது. காரணம், பிரான்சிலே குட்டிக் கட்சிகளும், உதிரிகளும் அதிகம். அவர்களுடைய மனம் மாறுவதைப் போலவே ஆட்சியும் மாறிக் கொண்டே இருக்கும். எந்தப் பெரிய கட்சிக்கும் 'மெஜாரிட்டி' கிடையாதாகையால், வாரத்துக்கு ஒருமுறை மந்திரிசபை மாறிக்கொண்டே இருக்கிறது!

இப்போது புதிதாக அமைச்சு கட்டில் ஏறியிருக்கும் எட்கர் பார்தான் இதோ படத்தில் இருப்பவர். முன்னைய பிரதமர் மெண்டஸ் பிரான்சைப்போல புரட்சிப் பொறியாய் இருக்காவிட்டாலும். இவர் மண்டுகமாய் இருக்கமாட்டார் என்றே எல்லோரும் எதிர்பார்க்கின்றனர்.

இவருடைய மந்திரி சபை இன்னும் எத்தனை வாரங்களுக்கு உயிர் வாழ்கிறதோ ?


**'முரசொலி'**

**சந்தா விபரம்**

**உள்நாடு-இலங்கை**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 6-0-0 |
| 6-மாத சந்தா | 3-8-0 |

**வெளிநாடு**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 7-0-0 |
| ஆறுமாத சந்தா | 4-0-0 |

மூன்று மாத சந்தா கிடையாது.

# அருளானந்தருக்கு அதிர்வேட்டுகள்!

செத்துக்கொண்டிருக்கும் சைவ சமயத்திற்கு புத்துயிர் அளிக்க, எட்டுத் திக்கும் பறந்து பறந்து 'தொண்டாற்றி' வருகிறார் இளந் துறவி குன்றக்குடி அடிகளார். அந்தத் 'திருத் தொண்டி'ன் ஒரு கட்டமாக அன்னவர் சென்ற திங்கள் சிங்கப்பூர் சென்றிருந்த காலை, அங்கர் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அவரிடம் நேரிடையாகக் கொடுத்த ஐய வினாக்கள்தான் கீழே தரப்படுகின்றன. கடல்கடந்த நாட்டிலே கழகக் காளையர் 'அடிகளை'த் திணற அடித்த வினாக்கள் இதோ:

அடிகளே !

1. கோலாலம்பூரில்,மாரியம்மன் கோவிலில் நடைபெற்ற கூட்டத்தில் "ஏ மனிதனே! விரிந்த வானுலகில் ஆண்டவன் ஒருவனே உயிருள்ள பொருள்களைப் படைக்க முடியும்! மக்களால் இயலாது" என்று பேசியுள்ளீர்கள். ஆனால்,

மலாயாவுக்குப் புறப்படுமுன், சென்னை, மயிலைக் கோவிலில் சமயப் பேரவை சார்பில் கூடிய கூட்டத்தில் "ஏழாம் நூற்றுண்டில் இதே மயிலையில் எலும்பிலிருந்து அழகிய பெண்ணை திருஞான சம்பந்தர் உருவாக்கியதாகக் குறிப்பிட்டுவிட்டு, அது பொய்யா? கனவா?" என்ற கேள்விக் குறிகளைக் கிளத்தினீர்கள்.

உயிருள்ள பொருளை மக்களால் படைக்க முடியாதென்று கூறும் தாங்கள், மனிதனுகிய திருஞான சம்பந்தர் உயிரற்ற எலும்பிலிருந்து எப்படி அழகிய பெண்ணை உருவாக்கினர்? உங்களது இரண்டு கூட்டப் பேச்சுக்களில் எது உண்மை?

2. அதே கூட்டத்தில், பட்டுக்கோட்டை சோஷியலிஸ்ட் திரு. வேதாசலம் அவர்களிடம் உரையாடியபோது "ஆலயத்திற்குப் போகவேண்டுமென்ற அவசியமில்லை. வயிற்றுக்கு ஒருவன் வாடுவதைப் பார்த்துவிட்டு பேசாமல் போகாதீர்கள். அவன் பசிப்பிணியைப் போக்குங்கள். அதுவே ஆண்டவன் பணி" என்றும் குறிப்பிட்டுள்ளீர்கள்.

தமிழகத்தில் லட்சக்கணக்கான மக்கள் பட்டினியாய், பஞ்சத்திலும், வறுமையிலும் வாடும்போது, மதத்தின் பெயரால் திருப்பதி வெங்கடாசலத்திற்கு பல லட்சக் கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள வைரமுடி, இரத்தின ஹஸ்தம்—தில்லை நடராசனுக்கு தங்கஓடு—மதுரை மீனாட்சி அம்மைக்கு வைர மூக்குத்தி—ஆறுகால பூசை—ஆடம்பரமான உற்சவம் இவைகளோடு, தருமபுரம்—திருவாவடுதுறை—திருப்பனந்தாள் போன்ற மடங்களுக்கு பல கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமானமுள்ள சொத்துக்களுக்குக் குறைவேயில்லை. மதத்திற்காகவும், ஆண்டவனுக்காகவும் என்று, செலவிடப்படும் லட்சக்கணக்கான ரூபாய்கள், நடமாடும் தெய்வங்களான ஏழைகளை வாழ்விக்க, சிறுவர்களுக்கு அறிவுதர, பிணியாளர்களுக்கு மருந்துதர பயன்படுத்தினல் நல்லதல்லவா?

○ இவைகளிலிருந்து, பாட்டாளிக்குத் தரப்படுகிற ஒருமுழத் துண்டு, பகவான் தனக்குப் போர்த்தப்படும் பொன்னுடையாக ஏற்றுக்கொள்ளமாட்டாரா?

○ இவைகளிலிருந்து, ஏழைக்குத் தரப்படுகிற ஒரு கவளச்சோறு, ஈசன் சன்னதியில் படைக்கப்படும் பெரிய ஆராதனையைவிட மேலல்லவா?

○ இவைகளிலிருந்து, ஏழையின் வயிறு குளிர்ந்தால், ஆண்டவன் அகம் மகிழாதா?

○ இவைகளிலிருந்து, ஏழைகளின் முகத்தில் மகிழ்ச்சி மலர்ந்தால், அதுவே ஆண்டவனுக்கு செலுத்தக்கூடிய காணிக்கையல்லவா?

3. பினங்கு ராமகிருஷ்ண ஆசிரமத்தில் நடந்த கூட்டத்தில் "ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பதுதான் தமிழர் நெறி; தமிழ்நாட்டில் ஒருபோதும் பல கடவுள் வணக்கம் இருந்ததில்லை. இருக்கப் போவதுமில்லை."என்று பேசியுள்ளீர்கள்!

இது உண்மையானல், சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானும், அவருடைய குடும்பத்தினர்களாகிய பார்வதி, விநாயகர், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை முதலிய கடவுள்களை மறுக்கிறீர்களா? சைவ சமயத்தைச் சார்ந்த சிவன் கோயில்களில் பல தெய்வங்கள் இருக்கக் காரணம் என்ன?

4. கோலாலம்பூர் மாரியம்மன் கோவிலில் நடைபெற்ற கூட்டத்தில் "ஆண்டவன் உங்களிடையே இருக்கிறான். கைலாயத்திலோ—வைகுண்டத்திலோ அல்ல" என்று குறிப்பிட்டுள்ளீர்கள். இதன்படி தாங்கள் கைலாயம். வைகுண்டம் எதுவுமில்லை என்று நம்புகிறீர்களா? நம்மிடத்தே உள்ள கடவுளுக்கு கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவுசெய்து கோவில்கள் கட்டுவானேன்? பல லட்சக் கணக்கான ரூபாய்கள் செலவு செய்து உற்சவங்கள், ஆராதனைகள் செய்வானேன்?

5. அதே கூட்டத்தில், "தீய பழக்கங்களை ஒழிப்பதற்கு முதல் கவனம் செலுத்திவிட்டு பிறகு கடவுளைப்பற்றி பேசுவதுதான் முறை" என்று பேசியுள்ளீர்கள்!

சமூகத்தில் ஏற்பட்டுள்ள உயர்வு-தாழ்வு, ஏழை-பணக்காரர், பிறப்பால் உயர்ந்த ஜாதி-தாழ்ந்த ஜாதி-தீண்டாமை, ஆண்டான்-அடிமை, மதத்தின் பெயரால், கடவுளின் பெயரால், மோட்ச நரகத்தின் பெயரால் மக்களிடையே ஏற்பட்டுள்ள தீய பழக்க வழக்கங்களையும் மூட நம்பிக்கைகளையும் சடங்குகளையும் ஒழிப்பதற்கு பாடுபட்டுவரும் சீர்திருத்த நோக்கங்கொண்ட கழகங்களை நீங்கள் வெறுப்பது ஏன்?

6. அதேகூட்டத்தில், 'பொருளையும், ஆற்றலையும் விளக்கவே சிவசக்தி வழிபாட்டு முறை விளக்கப்பட்டிருக்கிறது' என்று கூறியுள்ளீர்கள். அப்படியானல் லிங்க உருவ வழிபாட்டின் பொருள் என்ன? சிவபெருமான் ரிஷி பத்தினியுடன் கள்ள நட்பு கொண்டிருக்கும்போது, ரிஷி கண்டுகொண்டு சிவபெருமானுடைய ஆண்குறி துண்டித்து விழக்கடவது என்று சாபமிட்டதால், சிவபெருமானுடைய ஆண்குறி துண்டித்துவிழ, துண்டித்து விழுந்த ஆண்குறியை பெண்குறியில் பொருத்தி, ஆண்குறி சிவமென்றும் பெண்குறி சக்தி என்றும் பெயரிட்டதாகக் கூறப்படும் புராணக் கதையை நம்புகிறீர்களா?

7. பினங்கு, 30, ஸ்ரீபஹாரிரோடு, அருட்பிரகாச வள்ளலார் மடத்தில் நடந்த கூட்டத்தில் 'அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை என்று 1008 தரம் சொன்னுல் நிச்சயம் நன்மை ஏற்படும்' என்று கூறியுள்ளீர்கள்.

உங்கள் சொல்படி 1008 தரம் அருட்பெருஞ்ஜோதி தனிப்பெரும் கருணை என்று சொல்பவருக்கு என்ன நன்மை ஏற்படும்? உங்கள் முன்பே 1008 தரம் சொல்லுவதற்கு தயாராக உள்ள எங்களுக்கு இன்ன நன்மை ஏற்படும் என்று உறுதி கூற முடியுமா? நீங்கள் சொல்லியபடி 1008 தரம் சொல்லியபின் குறிப்பிட்ட நன்மை ஏற்படாவிட்டால் நீங்கள் சொல்வதெல்லாம் பித்தலாட்டம் என்பதை ஒப்புக் கொள்கிறீரா?

8. ஒருவன் அன்பு, அறம், அருள், ஒழுக்கம், அறிவு, ஆற்றல், நீதி, நேர்மை ஆகியவற்றை உடையவராக இருக்க, நீங்கள்போற்றும் திருக்கோயில் வழிபாடு அவசியம்தானு? திருநீற்றுப் பூச்சு அவசியம்தானு? காவிஉடை அவசியம்தானு? சிவன், அவர்மனைவி பார்வதி, அவர்கள் பிள்ளைகள் விநாயகர், சுப்பிரமணியர், அவரின் மனைவியர் வள்ளி, தெய்வயானை, விஷ்ணு, பிர்மா போன்ற கடவுள்களை வணங்க வேண்டியது அவசியம்தானு? அதைப்பற்றிய ஆபாசமான அருவருக்கத்தக்க புராணங்களைப்பற்றிய உங்களின் உண்மைக் கருத்து என்ன?

9. நீங்கள் கூறுவதுபோல் திருந்திய சிந்தையின் உலக நலங்கருதி உருவெடுக்கும் உயர்வான கொள்கைகளே சமயம் எனப்படுவது என்றல்,சைவம்-வைணவம்-புத்தம்-சமணம் இஸ்லாம்-கிருஸ்துவம்-பார்சி-சீக்கியம் போன்ற இவைகளில் எது திருந்திய சிந்தையில் உலக நலங்கருதி உருவெடுத்த, உயர்வான கொள்கைகளையுடைய சமயம்? இவைகளில் ஏதேனும் ஒன்ரு அல்லது எல்லாமுமா? எல்லாமென்ருல், ஒன்றுக்கொன்றுகொள்கைகள் முறண்படக் காரணம் என்ன? தனித்தனி மதப் பிரசாரங்கள் ஏன்?

10. உலகத்திற்கெல்லாம் நாகரீகத்தைக் கற்றுக்கொடுத்த நாடு, பொன்விளையும் நாடு, ஜீவன் முக்தர்கள், ஆச்சாரியார்கள் வாழ்ந்த நாடு, அன்பு, அறம் ஆகியவற்றின் வழியே வாழ்ந்து காட்டிய நாடு என்று போற்றப்படுகின்ற தமிழ் நாட்டிலிருந்து பல லட்சக்கணக்கான தமிழர்கள் தோட்டக்கூலிகளாக் வேறு நாடுகளுக்குத் வரக் காரணம் என்ன?

11. முதலையுண்ட பாலனை சுந்தரமூர்த்தி நாயனுர் மீட்டார் என்பது உண்மையா? உண்மையென்ருல், இரண்டு வருஷங்களுக்கு முன்பு முதலை உண்ட பாலன் எப்படி உயிருடன் வர இயலும்?

12. சைவ சமயத்தைப் பற்றியோ, சிவபெருமானைப் பற்றியோ, உலகத்தில் உள்ள நன்மை தீமைகளைப் பற்றியோ ஒன்றும் தெரியாத—தெரிந்து கொள்ளமுடியாத பால பருவத்தையுடைய திருஞான சம்பந்தருக்கும் பார்வதி பால் ஊட்டக் காரணம் என்ன?

உலகத்தில் எத்தனையோ லட்சக் கணக்கான பிள்ளைகள் பால் இன்றி வாடி, சாகும் விடும் போது, திருஞான சம்பந்தருக்கு மட்டும் பார்வதி பச்சாதாபப் பட்டு பால் ஊட்டியதற்குக் காரணம் என்ன?

13. சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள் அஹிம்சையை உயிராக உடையவர்கள், மற்றவர்களுக்கு மனத்தால்கூட தீங்கு நினைக்காதவர்கள் என்று சொல்லப்படும்போது, மதவேறுபாட்டின் காரணமாக, மதுரையில் சைவர்கள், புத்தவிஹாரத்தைக் கொளுத்தியும், 8000 சமணர்களைக் கழுவில் ஏற்றியும் வெறியாட்டமாடியது முறையா? இந்த சம்பவத்தின் நினைவாக சைவர்கள் உற்சவம் கொண்டாடுவது இழிந்த செயல் அல்லவா?

14. சைவ சமயத்தைப் பற்றி எழுதப்பட்டுள்ள புராணங்களின்படி:—

தன் இரண்டு கண்களையும் குத்திப் பிடுங்கிக் கொண்ட பின்புதான் பரமசிவன் கண்ணப்பருக்கு மோட்சம் கொடுத்தார்.

தான்பெற்ற குழந்தையின் கழுத்தை அறுத்து, பின்னைக் கறிசமைத்து, பரமசிவனுக்குப் போட்டபின்தான் பரமசிவன் சிறுத்தொண்ட நாயனுருக்கு மோட்சம் கொடுத்தார்.

அக்கினியிலே மூழ்கி, தன்னை அழித்துக் கொண்ட பின்னர்தான் நந்தனுருக்கு மோட்சம் கொடுத்தார்.

## "குன்றக்குடியாருக்கு"
## ★ மலேயாவில் மண் கவ்வு படலம்! ★

● தொடர்ச்சி 10-ம் பக்கம்

# கடைசிப்பக்கம்

இ. ம. சலீம்; டாலக்கோடு.

(?) தனி இனமான திராவிடர்கள் தங்களின் உரிமையோடு கூடிய வாழ்க்கைக்காக திராவிடநாடு வேண்டுமென்று இனமனப்பான்மை காட்டும் போது. இயக்கப் பணியில் ஈடுபட்டிருக்கும் முஸ்லீம்கள் அதில் எந்த ஆதாரம் கொண்டு போராடுவது ?

நல்ல கேள்வி, நண்பரே! தென்னாட்டிலிருக்கும் முஸ்லீம் தோழர்களில், நேராக பாரசிகத்திலிருந்து இங்கு குடியேறியோரின் பரம்பரை விரல் விட்டு எண்ணக்கூடியதுதான். தமிழகத்தின் உட்பகுதிகளில், இன்றுகூட முஸ்லீம்களை 'இஸ்லாமானவர்கள்' (இஸ்லாம்-ஆனவர்கள்) அதாவது மதம்மாறியவர்கள் என்றுதான் அழைக்கிறார்கள். மதத்தால் முஸ்லீமாய் இருந்தால்கூட. பிறந்த நாட்டால், பேசும் மொழியால், கொண்ட கலாச்சாரத்தால் நீங்கள் திராவிடர்கள்தான்! கமால் பாட்சாவின் உள்ளத்திலே மூண்டிருந்த பகுத்தறிவுக்கனலை நீங்களும் கொண்டு, எங்களோடு சேர்ந்து நாட்டுப் பிரிவினைக்கு பாடுபடுவதைத் தடுப்பதற்கு எந்தவித ஆதாரமும் கிடையாது தோழரே!

(?) உங்கள் கட்சிப் பத்திரிக்கைகளில் சினிமா விளம்பரங்கள் வருவது தவறல்லவா?

சினிமாவுக்கு நெருப்பு வைக்க வேண்டுமென்று சொல்பவர்களே, சினிமா விளம்பரத்தால் வாழுகிறார்கள்; அவர்கள் செய்வதைவிட நாங்கள் பெரிய தவறு ஏதும் செய்யவில்லையே?

மரியநாயகம்; மூகவை.

(?) பாமர மக்களின் துயர் துடைக்க தி. மு. க. ஏன் போராட்டம் நடத்துவதில்லை?

யார் சொன்னது, அப்படி? தென்னகத்தில் எந்த அரசியல் கட்சி தஞ்சை — திருச்சி புயல் நிவாரணத்துக்கு பொருளுதவி செய்தது? எந்த அரசியல் தலைவர்கள் கைத்தறித் துணிகளைத் தோளிலே சுமந்து விற்றார்கள்? அது தவிர, தி. மு. க. தனிநாடு கேட்பதே பாமர மக்களின் துயர் துடைப்பதற்குத்தான்! தி. மு. க. நடத்தும் எந்தப் போராட்டமும் அந்த முழு முதற்கொள்கையைத் தழுவியதாகத்தான் இருக்கும்!

கே. மதுரை; குச்சிப்பாளையம்

(?) சழகத் தோழர்கள் சிலர் கட்சியைவிட்டு விலகினால், அதைப்பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ?

வருவோரை வரவேற்று: போவோரும் புத்தி திருந்தி. இன்றில்லாவிட்டாலும் நாளை வந்து சேர்வார்கள் என்கிற அடிப்படையில் வளர்வதுதான் ஜனநாயகக் கட்சிகளுக்கு அழகு. கடல் நீரிலே ஒரு சிறு பகுதி ஆவியாகி விடுகிறதே என்பதற்காக, அதில் வந்து கலக்கும் ஆறுகள் தோற்று வாய்க்கே திரும்பி ஓடி விடுவதில்லை!

பொன்னுசாமி;
எட்டியார் தோட்டை

(?) கனவுகள பலிப்பதுண்டா?

ஏன் இல்லை? ஜின்னாவும் அவரோடு சேர்ந்த எட்டு கோடி முஸ்லீம்களும் கண்ட 'கனவு'தான் இன்று பிறைக்கொடியோடு திகழும், பாகிஸ்தான்!

செய்யது முகமது;
வேலப்பாளையம்

(?) மரணத்திற்குப் பிறகு மனிதனை ஆட்டி வைக்கும் சக்தி என்னவாகிறது?

மறுபிறப்பு எடுக்கிறது என்கிறான், சனாதனவாதி. அதைப்பற்றி உனக்கேன் கவலை—என்கிறான் பகுத்தறிவுவாதி!

ராமலிங்கம்; சீர்மங்கலம்

(?) எங்களூரில் ஒரு நண்டர் அரசியல் தலைவர்களையெல்லாம் 'முட்டாள்' என்று திட்டுகிறார். அவரை எப்படித் திருத்துவது?

சிலருக்கு ஒரு வியாதி உண்டு. அதாவது: தன்னைப் போலவே பிறரையும் நினைத்து விடுவார்கள். எதையும் ஆய்ந்துபார்க்கும் பகுத்தறிவுதான் அந்த வியாதி தீர்க்கும் நன் மருந்து!

## காட்டாறு...

7-ம் பக்கத் தொடர்ச்சி

கதிர்வேல் நீந்தினான்...கைகளை அகல விரித்து நீந்திக் கொண்டே போனான்...

✶

காலைக் காப்பியோடு, பத்திரிகைகளிலே வந்திருக்கும் சூடான செய்திகளையும் ரங்கநாயகம் ஜீரணித்துக் கொண்டிருந்தார்.

"என்ன சார்! கதிர்வேலனுக்கு வேலை வாங்கிக் கொடுத்தீர்களா?" என்று கேட்டபடியே நானும் உள்ளே நுழைந்தேன்.

ரங்கநாயகம் என் முன்னே பத்திரிகையை நீட்டினார். அவர் விரல் வைத்த இடத்திலே காணப்பட்ட செய்திகளைப் படித்தேன்.

இங்கிலாந்திலே கால் தடுக்கி கீழே விழுந்து. பலத்த காயம் காரணமாக கஷ்டப்பட்டுகொண்டிருந்த பெயர் பெற்ற பந்தயக் குதிரையான ஷீபாவை சுட்டுக் கொன்று விட்டதாக ஒரு செய்தி வெளிவந்திருந்தது.

இன்னொரு செய்தி...என் கண்களை நம்ப முடியவில்லை. விழிகளிலே ஈட்டி சொருகுவதைப்போல் இருந்தது...ஆமாம், இன்று காலையில் காவிரி ஆற்றின் ரயில் பாலத்துக்கு அருகில் உள்ள சுழலிலே சிக்கி, குளிப்பதற்காக வந்தவர் ஒருவர் மரணமடைந்ததாகவும், புலன் விசாரித்ததில் அவருடைய பெயர் கதிர்வேலு என்று தெரிய வருவதாகவும், அந்தச் செய்தி கூறியது.

கொஞ்சம் நிமிர்ந்து, ரங்கநாயகத்தைப் பார்த்தேன். அவருடைய தலைக்கு மேலே-**ரங்கநாயகம்; சமூக சேவகன்** என்ற போர்டு தொங்கிக் கொண்டிருந்தது.

அவர் சிரித்தார்; அந்தச் சிரிப்பின் அர்த்தம் எனக்கு இன்று வரை விளங்கவேயில்லை. இது என்ன சமூக சேவையோ எனக்குத் தெரியவில்லை; ஆனால் அவரது சமூகத் தொண்டு ஒரு உயிரை கஷ்டப்படாமல் காப்பாற்றி விட்டது என்பதை மட்டும் என்னால் சொல்லிக் காட்டாமல் இருக்க முடியாது. எத்தனையோ அரசியல் தலைவர்களும், ஐந்தாண்டுத் திட்டங்களும் தீர்க்கமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்குதான் ஒரு புதிய வழியைக் கண்டுபிடித்து விட்டதாகத்தான் அந்தச் சிரிப்பு எனக்கு ஜாடை சொல்லியது. இதைத்தவிர ரங்கநாயகத்தின் செயலுக்கு நான் என்ன விளக்கம் தரமுடியும்?

**—மாறன், பி. ஏ.** (ஹானர்ஸ்,)

## 27-3-55-ல் தி. மு. கழக சிற்றூர்-பேரூர்-நகரக் கிளை செயற்குழுத் தேர்தல்

### 10-4-55-ல் மாவட்டக் கிளைச் செயற்குழுத் தேர்தல்

### 27—4—55-ல் புதிய பொதுக்குழுக் கூட்டம் : பொதுச்செயலாளர் தேர்தல்

## பொதுச்செயலாளர் அறிவிப்பு

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் இவ்வாண்டு நடைபெற வேண்டிய தி. மு. கழகத் தேர்தல்கள் பற்றிக் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்கள்; அது வருமாறு:—

தி. மு. கழக சிற்றூர் (சிறிய பஞ்சாயத்து)க் கிளை, பேரூர் (பெரிய பஞ்சாயத்து)க் கிளை, நகர (நகராட்சி)க் கிளை, சென்னை வட்டக் கிளை ஆகியவற்றின் புதிய செயற்குழுத் தேர்தல்கள் நடைபெற, 27—3—55 ஞாயிற்றுக்கிழமை தேர்தல் நாளாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது

எல்லா மாவட்டங்களின் செயற்குழுத் தேர்தல் நாளாக, 10—4—55 ஞாயிற்றுக்கிழமை தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது.

புதிய பொதுக்குழு கூடிப் பொதுச்செயலாளரைத் தேர்ந்தெடுக்கும் நாளாக. 24—4—55 ஞாயிற்றுக்கிழமை தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது.

1—3—55-ஆம் நாளிலிருந்து 31—4—55-ஆம் நாள் வரையில் புதிய உறுப்பினர்கள் சேர்ப்பது நிறுத்தப் பட்டிருக்கிறது. 28—2—55-ம் நாள்வரை உறுப்பினரானவர்கள் மட்டுமே கிளைக் கழகத் தேர்தலில் பங்கு கொள்ள வேண்டும். 28—2—55-ஆம் நாளுக்கு முன்பு அமைக்கப்பட்ட கிளைக் கழகங்கள் மட்டுமே தேர்தல் நடத்த வேண்டும். புதிய கிளைக் கழகங்கள் அமைப்பது 1-5-55-க்கு மேல்தான் நடைபெற வேண்டும்.

தேர்தல் முடிவுகளைக் கிளைக் கழகப் பதிவுச் சீட்டில் எழுதி 31—3—55-க்குள் தலைமைக் கழகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். கிளைக் கழகப் பதிவுச் சீட்டு தலைமைக் கழகத்திலிருந்து 10—3—55-ஆம் நாள் அனுப்பி வைககப்படும். பதிவுச் சீட்டு கிடைக்கப்பெறாத கிளைக் கழகங்கள் உடனே தலைமைக் கழகத்துக்கு எழுதிப் பெற்றுக்கொளளலாம்.

27—3—55-ல் தேர்தல் நடத்திப் பதிவுச் சீட்டைத் தலைமைக் கழகத்துக்கு அனுப்பி வைக்கும் கிளைகள் மட்டுமே மாவட்டக் கிளைச் செயற்குழுத் தேர்தலில் கலந்துகொள்ள அனுமதிக்கப் பெறும்.

கிளைகளின் தேர்தல் விதிகளும், முறைகளும் அடுத்த அறிக்கையில் வெளியிடப்படும்.

பொதுச்செயலாளர்

**சி. என். அண்ணாதுரை,**

'அறிவகம்'

சென்னை, 1—3—55


தயாராகிறது!

**நாவலர் இரா. நெடுஞ்செழியன்**

வழங்கும் பகுத்தறிவுப் படையல்!

**மதமும், மூடநம்பிக்கையும்!**

**திராவிடப்பண்ணை**

தெப்பக்குளம் : : திருச்சி.


Edited, Printed and published by M. Karunanithi at Murasoli Press, 4/128, Mount Road, Madras-6.